# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு VI

பகுதி 2

Kerala Reader - Tamil (AT)
Standard VI
Part - 2

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிச மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

# 6

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

உயிர் வாழ உணவு தேவை என்பது போல் உள்ளம் வாழ மொழி தேவை என்பார்கள். மனிதன் ஆறறிவு படைத்தவன். அந்த ஆறாவது அறிவு என்பது அவனிடம் இருக்கும் சிந்தனை ஆற்றலாகும். சிந்தனை என்பது மொழி எனும் ஊடகத்தின் வழியே நிகழ்கிறது. எனவே மனிதனுக்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது மொழி. சின்ன வகுப்புகளில் பாடல்கள் பாடியும் கதைகள் கேட்டும் மாணவர்கள் மொழியறிவைப் பெறுகின்றனர். பெரிய வகுப்புகளை எட்டும்போது மொழியின் அடிப்படைக் கூறுகளை அறிவதோடு பிழையின்றிப் படிக்கவும் பேசவும் எழுதவும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதுவே மொழிக்கல்வியின் அடிப்படை நோக்கமாகும். மேலும் மொழிக் கல்வியின் பயனாக மொழியை மட்டும் தெரிந்து கொள்ளாமல், தம்மைச் சுற்றியிருக்கும் இயற்கையையும், தாம் உட்பட்ட சமூகத்தையும் மாணவர்கள் அறியவும் ஈடுபடவும் வேண்டும். இவற்றின் அடிப்படையில் சில பாடப் பொருள்களைத் திட்டமிட்டு, அப்பாடப் பொருள்களுக்கு ஏற்ப பாடப்பகுதிகளைத் தேர்வு செய்து இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பாடப்பகுதிகளைப் பரிமாற்றம் செய்வதால் மட்டும் நோக்கங்கள் நிறைவேறி விடுவதில்லை. மாணவர்கள் எந்த அளவுக்கு மொழியறிவு பெற்றுள்ளனர் என்பதை அளப்பதற்கும், மொழிப் பயிற்சி அளிப்பதற்கும் தகுந்த செயல்பாடுகள் இணைக்கப்பட்டுள்ளன. பாடங்களைக் கசடறக் கற்றும் செயல்பாடுகளைச் செவ்வனே செய்தும் மொழியாற்றலை வளர்த்துக் கொள்ளுங்கள்.

வாழ்த்துகள்.

**முனைவர் ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - VI - AT (Part 2)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Shini, S.**
Associate Professor of Tamil, University College, Thiruvananthapuram.

### Experts

**Dr. Sathiyamoorthy, B.**
Asst. Professor & Head, Dept. of Tamilology, Madurai Kamaraj University.

**Dr. Jeyasankar, J.**
Asst. Professor, Govt. College, Munnar.

**Dr. Rajendran, S.**
Associate Professor (Rtd), Dept. of Tamil, University College, Thiruvananthapuram

### Members

**Aji Prakash, M.H.**, UPST, GHS, Koovakkad, Kollam.

**Anand, C.**, PD Teacher, GVHSS & TTI, Kumily, Idukki.

**Manikandan, G.**, UPST, Govt. HSS, Anakkara, Idukki.

**Sreemurughan, D.**, UPST, GHSS, Anakkara, Idukki.

**Aromal,** Artist, College of Fine Arts, Thiruvananthapuram.

**Albin Francis,** Artist, College of Fine Arts, Thiruvananthapuram.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
**Assistant Professor (Tamil), SCERT.**

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


பக்கம்

அலகு 4 இணையும் கரங்கள் ........ 87 - 106

வான்மழை ........ 88 - 93

வானம் பொய்த்தது ........ 94 - 100

வெகுண்ட பேரலை ........ 101 - 106

அலகு 5 விழித்திடு! வாழ்ந்திடு! ........ 107 - 128

உயிரும் உணர்வும் ........ 108 - 115

அன்னையை அரவணை ........ 116 - 122

சுத்தம் சோறு போடும் ........ 123 - 128

அலகு 6 ஆடுவோமே பள்ளு பாடுவோமே ........ 129 - 156

தியாகிகள் தினம் ........ 130 - 138

ஒற்றுமையே உயர்வு ........ 139 - 143

பைந்தமிழ்ப் பாரதி ........ 144 - 156

அகரமுதலி ........ 157 - 158

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 4

# இணையும் கரங்கள்



நாட்டிற்கு நாடு, இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் காலநிலைகள் மாற்றம் பெறுகின்றன. இயற்கையில் ஏற்படும் மாற்றங்களே காலநிலை மாற்றத்திற்குக் காரணமாகின்றன. காலநிலை மாற்றத்தாலும் இயற்கையாலும் ஏற்படக்கூடிய பேரிடர்கள் மக்களின் வாழ்க்கையைப் பெருமளவில் பாதிப்படையச் செய்கின்றன.

# வான்மழை



## புயல்

புயலது அடிக்குது
கடலது பொங்குது
மழையது பொழியுது
மரமது வீழ்குது.

இடியது இடிக்குது
கடலது கலங்குது
மின்னல் அடிக்குது
மேகம் திரளுது.

தண்ணீர் பெருகுது
வெள்ளம் ஓடுது
கடைமடை திறந்து
கடலெனப் பாயுது.

ஓங்காரச் சத்தம்
ஊரைக் குலுக்குது
அண்ட சராசரங்கள்
அடங்கி நடுங்குது.

**காற்றின் வேறு பெயர்கள்**

காற்று, வளி, வாயு, தென்றல், புயல், சூறாவளி

எங்கும் வெள்ளம்
எதிலும் வெள்ளம்
குடிசைகள் சாய்ந்தன
கும்பிகள் கருகின.

மனைகள் மிதந்தன
மாடுகள் மிதந்தன
மனித உடல்கள்
மரமெனச் சாய்ந்தன.

பயிர்கள் அழிந்தன
பாரது ஒடுங்கின
ஊரது இருண்டது
ஒப்பாரி கேட்டது.

மரமது வீழ்ந்தது
மனிதனை அடைத்தனை
விளம்பரம் வீழ்ந்தது
வீதியை அடைத்தனை.

தந்திகள் வீழ்ந்தன
கால்களை அடைத்தனை
மழையது வீழ்ந்தன
மனிதனை நனைத்தன.

**காற்றின் வகைகள்**

தென்றல் காற்று,
வாடைக் காற்று,
கொண்டல் காற்று,
மேலைக் காற்று,
மென் காற்று,
புழுதிக்காற்று.

கிழக்கு – கொண்டல்
மேற்கு – கோடை
தெற்கு – தென்றல்
வடக்கு – வாடை

– ஏ. ஜி. நாயகம்

**ஆசிரியர் குறிப்பு** இவர் புதுக்கவிதைகள் எழுதுவதில் வல்லவர். திருந்தாமனம், தேடுதல் தான் வாழ்க்கை என்பன இவரது படைப்புகள் ஆகும். இக்கவிதை திருந்தாமனம் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது ஆகும்.

## செயல்பாடுகள்

- பாடலைக் குரல் ஏற்றத்தாழ்வுடன் பாடுங்கள்.
- முதல் எழுத்து ஒரே போல் வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- கடைசி/ இறுதி எழுத்து ஒரே போல் வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- பாடலின் கருத்துகளை உரைநடை வடிவில் எழுதுங்கள்.
- பெருமழைக் காலங்களில் கையாள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பு தயாரியுங்கள்.
- பாடலில் வரும் வினைமுற்றுச் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- அகர முதலி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - திரளுதல்
  - அடங்கி
  - வீதி
  - ஓங்காரம்
  - கும்பி
  - தந்தி
  - குலுக்குது
  - பார்
  - அண்டசராசரம்

## வெள்ளக் கொடுமை

ஆண்டவன் மறக் கருணையோ, இயற்கைத் தேவியின் ஆற்றொணாச் சினமோ, நாட்டார் தீவினையோ தெரியவில்லை. சில ஆண்டுகளாக நமது நாடு வெள்ளத்தால் பாழ்பட்டு வருகிறது. வங்காள வெள்ளமும் கர்நாடக வெள்ளமும் வைகைப் பெருக்கும் பொருநைப் பெருக்கும் விளைத்த துன்ப நோய் இன்னும் போகவில்லை. இப்பொழுதோ நமது அரிய தென்னாடே வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறது. சேர நாட்டில் வெள்ளம், கொங்கு நாட்டில் வெள்ளம், சோழ நாட்டில் வெள்ளம், பாண்டி நாட்டில் வெள்ளம், மைசூரிலும் வெள்ளம் வெள்ளமாம்! இவ்வெள்ளக் கொடுமையோடு செங்கோட்டையில் பூகம்பம்! என்ன கொடுமை!!

வெள்ளப் பெருக்கும் பூகம்பமும் நிகழ்த்திய கேடுகளுக்கு அளவும் உண்டோ? எத்தனை கிராமங்கள் மூழ்கின! எத்தனை வீடுகள் அழிந்தன! எவ்வளவு பாலங்கள் உடைந்தன! ரெயில் வண்டிகள் ஓடாது நிற்கின்றன; தபால்கள் நிற்கின்றன; போக்குவரவு நிற்கின்றன. இத்துன்பத்திடை வீழ்ந்து கிடக்கும் மக்கள் நிலையை என்னென்று எழுதுவது? ஆங்காங்கே பெண்மணிகள் என்னென்ன துயருற்றார்களோ? குழந்தைகள் என்னென்ன துயருற்றனவோ? துயரம் என்னவோ? அந்தோ! பகுத்தறிவில்லா ஏழைக் கால்நடைகளின் நிலையை உன்னும்போது உள்ளங் குழைகிறது. என்ன நிலை! என்ன கொடுமை! இப்பெருவெள்ளத்துக்குக் காரணம் மைசூரிலும் மேற்கு மூலையிலும் நீலகிரியிலும் பெய்த பெருமழையேயாகும். இயற்கையின் எழுச்சியைத் தடுக்க எவரால் முடியும்?

திருவாங்கூரும் கொச்சியும் இன்னும் நீரால் சூழப்பட்டிருக்கின்றன. திருச்சூர் வெள்ளத்திடைத் தத்தளிக்கிறது. கோயம்புத்தூருக்கருகே மன்னாரைச் சுற்றிப் பதினைந்து மைல் தூரத்திலுள்ள பாலங்களில் ஒன்றேனும் அழியாமலில்லை. அப்பகுதியில் மனிதருள் நூற்றுப்பதின்மரும்



கால்நடைகளுள் எண்ணிறந்தனவும் துறக்கம் புகுந்தனர். பல்லோர் ஊறுபட்டனர். இடிந்த கட்டடங்களுக்கு அளவில்லை. சேரனூர் பாலம் உடைந்து விட்டது. பல ராஜ பாதைகள் நீரில் மறைந்து கிடக்கின்றன. இன்னும் மழை ஒயவில்லை.

வெள்ளப் பெருக்கால் வருந்தும் சில பகுதிகளில் வியாபாரிகள் விலைகளை உயர்த்தினார்களென்றும் சிலர் திருடுகிறார்களென்றும் செய்தி கிடைத்திருக்கிறது. இக்கொடுமையினுங் கொடுமை வேறொன்றிருக்குமோ? வெள்ளக் காலத்தில் திருடப் புகுந்தவரை மனிதரென்றா சொல்வது? விலங்குகளும் அந்நிலையில் மக்களை ஒன்றுஞ் செய்யாவே! இவ்விருகால் விலங்குகள், நாற்கால் விலங்குகளிலும் இழிந்த பிராணிகளேயாகும்.

வெள்ளத்தால் நேர்ந்த உடைப்புகளையும் பிறவற்றையும் அரசாங்கத்தார் புதுக்கி ஒழுங்குபடுத்த அதிதீவிர முயற்சி செய்வர் என்பதில் சந்தேகமில்லை. ஆங்காங்கே வெள்ளத்தால் வீடிழந்து, மாடிழந்து, பொன்னிழந்து, பொருளிழந்து, உடையின்றி, உணவின்றித் துன்பக் கடலில் மூழ்கியுள்ள அருமை மக்களைக் காக்கும் வழி தேடவேண்டுவது நாட்டார் கடமை. வெள்ளக் கேட்டால் வருந்தும் உயிர்களின் துன்பத்தை ஒவ்வொருவரும் தமது துன்பமாகப் பாவித்தல் வேண்டும்.

– திரு. வி. கல்யாணசுந்தரனார்.

**ஆசிரியர் குறிப்பு** இவர் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தண்டலம் என்னும் சிற்றூரில் விருத்தாசல முதலியார் – சின்னம்மா தம்பதியர்களுக்கு ஆறாவது மகனாக 1883–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26–ஆம் நாள் பிறந்தார். சிறந்த மேடைப் பேச்சாளர். அரசியல், சமுதாயம், சமயம் சார்ந்த பல நூல்களை எழுதியுள்ளார். 1953 செம்டம்பர் 17–இல் காலமானார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட பாதிப்புகளை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.
- வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைப்புச் செய்ய மாவட்ட ஆட்சியாளருக்குக் கோரிக்கை மனு தயாரியுங்கள்.
- அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்
  - பாழ்பட்டு
  - துயருற்றார்கள்
  - பகுத்தறிவு
  - குழைகிறது
  - ஊறுபட்டனர்
  - தத்தளித்தல்
  - பாவித்தல்
  - உன்னும்
- பிரித்து எழுதுங்கள்
  - தூரத்திலுள்ள
  - பகுத்தறிவில்லாத
  - நாற்கால்
  - பொருளிழந்து
  - சந்தேகமில்லை
  - வீடிழந்து
  - பொன்னிழந்து
  - உணவின்றி
- வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் பற்றிய பத்திரிகைச் செய்திகளைத் திரட்டித் தொகுப்பு உருவாக்குங்கள்.
- பாடப்பகுதியில் வரும் வினைமுற்றுச் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
  எ.கா: மூழ்கின, கிடக்கிறது.

## மருதத்திலே வந்த வெள்ளம்!

தான் பாயும் மருத நிலமெல்லாம் செழிப்பு அடையவும் பணைத்து வளர்ந்து வானத்தைத் தடவுவது போல உயர்ந்திருக்கும் மருதமரங்கள் தளிர்க்கவும் எருமைக்கடாக்கள் பூட்டிக் கமலை இறைத்து நீர் பாய்ச்சும் மேட்டு நிலப்பகுதிகளிலும் நீர்ப் பெருக்கினையுடைய அகன்ற தாமரை மலர்கள் நிரம்பிய குட்டங்களிலும் சென்று வெள்ளம் பாய்ந்தது.

அந்த வெள்ளத்தில் நீந்த முடியாமல் தண்ணீரை விரும்பும் எருமைகளும் கூடப் பதறின. எருவாக வயல்களிலே போடப்பட்டிருந்த எருமைச் சாணம் சிதறி வெள்ளத்தோடு எங்கும் பரந்தது. உழுத புழுதியின் உழவுச் சால்கள் வழியாக ஓடி எங்கும் ஈரமாக்கி, சாலைகளிலுள்ள மரங்களெல்லாம் குளிர்கோத்து நிற்கும்படியாகவும் செய்தது.

முரல்களும் கரும்புப் பயிரும் சாய்ந்தன. அதிலே பாய்ந்தும் ரீங்காரமிட்டும் வண்டினங்கள் திரிந்தன. முதலைகள் எல்லாம் தாம் கிடந்த குட்டைகளைவிட்டு எங்கும் சரியுமாறு அவற்றை வெருட்டியதுடன், பெரிய வாழைகளை எல்லாம் மூட்டோடு பெயர்த்துக் குவித்து அடுக்கியும் வெள்ளம் வந்தது.

> நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ணமுடியாது

இப்படியாகச் சினங்கொண்டு வரும் வெள்ளை யானைக்கு எதிராக என்ன செய்வோமென்று நீர்நிலைகளிலே இருந்த வெண்சங்குகள் கிடந்து வருந்தின. மருத நிலத்துக் குடிசைகளையெல்லாம் பெயர்த்துக் கூட்டித் தன்னுடன் வாரிக் கொண்டு மழை வெள்ளமானது நீர்ப் பறவை ஒலி முழக்கம் மிகுந்திருக்கும் அழகிய நெய்தல் நிலக்குடிசைகளை நோக்கிச் சென்று புகுந்தது.

பாயும் மருதஞ் செழிக்கவே – பண்ணை
தோயும் மருதம் தளிர்க்கவே



பகட்டுக் கமலக் குட்டத்தில் – புனல்
தகட்டுக் கமலை வட்டத்தில்
போயும் எருமை பதறவே –உற
மேயும் எருமை சிதறவே
புழுதிச் சாலை நனைத்துமே – குளிர்
கொழுதிச் சாலை யனைத்துமே
சாயும் உரலுங் கரும்புந்தான் – அதில்
பாயும் முரலுஞ் சுரும்புந்தான்
சரிய முதலை முடுக்கியும் – வாழைப்
பெரிய முதலை அடுக்கியும்
காயுந் தவள வாரணம் – எதிர்
ஆயுந் தவள வாரணம்
கழனிக் குடிலைத் தொகுத்து– நெய்தலந்
துழனிக் குடிலிற் புகுந்ததே.

– முக்கூடற்பள்ளு

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து மருத நிலத்தை எவ்வாறு வெள்ளம் பாதித்தது என்பதைப் பற்றிக் கலந்துரையாடி எழுதுங்கள்.
- பாடப்பகுதியிலுள்ள வருணனைச் சொற்களை/வாக்கியங்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்கள் அமையுங்கள்.
    - மரகதப் பட்டு விரித்தாற் போல
    - ஓங்கி உயர்ந்த
    - வெள்ளிப் பனிபோல
    - சிலுசிலுப்பான

    எ.கா. வயல்வெளிகள் மரகதப் பட்டு விரித்தாற் போல விரிந்து பரந்து கிடக்கின்றன.
- அகரமுதலி பார்த்துப் பொருள் கண்டுபிடித்து எழுதுங்கள்.
    - சினம்
    - பதறின
    - தளிர்த்தல்
    - புனல்
    - சுரும்பு
    - மருதம்
    - கமலம்
    - குட்டம்
    - துழனி
    - வாரணம்
    - கழனி
    - வெருட்டி
    - கமலை
    - பகட்டு
    - முரலும்

# வானம் பொய்த்தது



## வறட்சிப் பாட்டு!

சங்கப் புகழ்பெறுஞ்
சந்தனச் சோலைகள்
காய்ந்து சருகாகுதே – தன்
அங்கங் குளிர்மயில்
அளவிலா வெம்மையால்
அலைந்து பறந்தோடுதே!

கானலை நீரென்று
கருதுமாம் விலங்குகள்
காவியம் பொய்யானதே – தார்க்
கானலை நீரென்று
கருதுவார் மனிதர்கள்
காரியம் மெய்யானதே !

தேனாறு பாலாறு
தெருவினில் வருமென்றார்
தெருவெலாம் நாறுதன்றோ – ஒரு
வானாறு மீனாறு
வரலாறு காணாமல்
வறட்சியே மீறுதன்றோ!

**முச்சங்கங்கள்**

**முதல் சங்கம்**
தென் மதுரை

**இடைச்சங்கம்**
கபாடபுரம்

**கடைச்சங்கம்**
தற்போதைய
மதுரை

படமெடுத் தாடிடும்
பாம்பாகத் தார்ச்சாலை
பாய்ந்தே நமைச்சீறுதே – நாம்
நடைபாதை சென்றாலும்
நீராய் உருகியதார்
நமைநோக்கி முன்னோடுதே !

நண்டின் வளைதேடி
நரிகளும் அலைந்தோடி
நாளெல்லாம் பரிதவிக்குதே – தேன்
வண்டுகள் மலர்நாடி
மகரந்தத் தேனின்றி
வண்ணச் சிறகடக்குதே !

புல்லையுங் காணாமல்
பசிவேகந் தாளாமல்
பசுமாடுந் தரைநக்குதே!
கல்லெல்லாம் உதயத்தில்
கனலாக உருமாறிக்
கடுவெம்மை தனைக்கக்குதே !

வானே உன் நீரின்றி
வாடிடும் மானிடர்
வாழ்ந்திட மழைபொழிவாய் – தெருவில்
பானையுந் தவலையும்
படையெடுத் தலையுதே
பார்த்தேனுந் தரைவருவாய்!

– வெற்றியழகன்

**ஆசிரியர் குறிப்பு** இவரது இயற்பெயர் ஜெயராமன். இவர் திண்டிவனத்திற்கு அருகிலுள்ள ஊரணி என்ற ஊரில் 12–10–1936 – இல் குப்புசாமி, முனியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். புலவர் பட்டம் பெற்ற இவர் அண்ணா புகழ் மாலை, வெண்ணிலா போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடலைப் பல்வேறு மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலை உரைநடையில் மாற்றி எழுதுங்கள்.
- உங்கள் ஊரில் ஏற்பட்ட வறட்சியைக் குறித்துப் பத்திரிகையில் வெளியிட பத்திரிகைச் செய்தி தயாரியுங்கள்.
- முதல் எழுத்து ஒரே போல வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் வாழும் விவசாயியிடம் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.
- வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய தொண்டு நிறுவனத்திற்கு ஒரு பாராட்டுக் கடிதம் எழுதுங்கள்.

- அகர முதலி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - காய்ந்து
  - அங்கம்
  - வெம்மை
  - மெய்
  - வண்ணம்
  - கானல்
  - பரிதவித்தல்
  - கனல்
  - மானிடர்
  - தவலை

> நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
> வானின்று அமையாது ஒழுக்கு

- பிரித்து எழுதுங்கள்.
  - பொய்யானதே
  - பறந்தோடுதே
  - தேனின்றி
  - பாலாறு
  - வருமென்றார்
  - தேனாறு
  - கல்லெல்லாம்

## நீரின் அருமை

ஓர் அழகான வளமான கிராமத்தில் எந்தக் குறையும் இல்லாமல் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். ஆனால் அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள மற்ற கிராமங்களில் எல்லாம் அடிக்கடி வறட்சியும் பஞ்சமும் ஏற்பட்டன. அதனால் சுற்றுப்புற கிராமங்களில் உள்ளவர்களுக்கு ஒரு சந்தேகம் வந்தது.

அவர்களின் ஊர்த்தலைவரைச் சந்தித்துத் தங்கள் சந்தேகத்தைக் கேட்டனர். "பருவமழை எல்லா இடத்தும் ஒரே போலப் பெய்தும் நம் கிராமங்களில் எல்லாம் வறட்சி ஏற்பட எப்படி இந்தக் கிராமத்தில் மட்டும் நீர் பற்றாக்குறை ஏற்படாமல் வளமோடு வாழ்கிறார்கள்...?" என்று கேட்டனர்.



அதற்கு அந்த ஊர்த்தலைவர், "எப்பொழுதும் வரும் முன் காப்பதே சிறந்தது. மழைத்துளி என்பது வெறும் நீர்த்துளி அல்ல. அது நம் உயிர்த்துளி". அதை நாம் ஒவ்வொருவரும் அறிய வேண்டும். தாகம் ஏற்படும் போது தண்ணீர் தேடுவதை விட தாகம் ஏற்படும் முன் தண்ணீரைச் சேகரித்துப் பழக வேண்டும். எப்பொழுதும் பருவநிலை ஒரே போல இருப்பதில்லை. பருவகாலத்தில் நம் தேவைக்கு அதிகமாகவே மழை பொழிகிறது. எனவே அந்த அதிகபடியான நீரைச் சேகரித்து வைக்க வேண்டும்.

"இந்தப் பூமியில் நாம் உயிர்வாழ இன்றியமையாத பொருட்களில் நீர் முதன்மையானது. அது நம் தாகத்தைத் தீர்ப்பதோடு நம்மைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் உதவுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக நாம் உண்ணும் உணவை விளைவிக்க நீர் இன்றியமையாதது. ஆனால் நாமோ நம் தேவைக்கு மட்டுமே அதனைத் தேடுகிறோம். அவ்வாறு இல்லாமல் பருவமழைக் காலங்களில் மழைநீரைச் சேகரித்துப் பழக வேண்டும். நாம் ஒவ்வொருவரும் மழைநீரின் அவசியத்தை உணர்ந்து அதைப் பாழாக்காமல் சேகரிக்க வேண்டும். அந்தக் கிராமவாசிகள் அதைத்தான் செய்கின்றனர். எனவேதான் இங்கு வறட்சி ஏற்படும் நிலையிலும் அவர்கள் கிராமம் செழுமையாக இருக்கிறது...." என்றார்.

அதைக் கேட்ட கிராமவாசிகளுக்கு உண்மை புரிந்தது. "நாங்களும் இனிமேல் பாதிப்பு வருவதற்கு முன்பே யோசித்து அதைத் தடுப்பதற்கான செயல்களைச் செய்து அறிவுடன் நடந்து கொள்வோம். இனி வரும் முன் காப்போம்..." என்ற உறுதிமொழியுடன் விடை பெற்றனர்.

– லதா

இக்கதை 'பழமொழி கதைகள் 56' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து அதன் கருத்தைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- வறட்சி ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- உங்களது பள்ளியில் "நீரின் அருமை" என்ற தலைப்பில் நடைபெற உள்ள கருத்தரங்கத்திற்கான நிகழ்ச்சி நிரல் தயாரியுங்கள்.
- "நீரின் அருமை" என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் சுவரொட்டி தயாரியுங்கள்.
- உங்கள் ஊரில் என்னென்ன நீர்நிலைகள் உள்ளன எனக் கண்டறிந்து பட்டியலிடுங்கள்.
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.

எ.கா:
- நீர்த்துளி – மேகம் குளிர்ச்சியடைந்து சிறு நீர்த்துளிகளாகப் பொழிகிறது.
- உயிர்த்துளி – ..........................................................................................
- மழைத்துளி – ..........................................................................................

## காட்டின் திருவிழா

அந்த அழகிய காட்டில் முன்பெல்லாம் நிறைய விலங்குகளும் பறவைகளும் இருந்தன. அங்கு எப்போதும் சலசலவென்று தண்ணீர் செல்லும் ஆறும் ஓடைகளுமாய் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவே இருக்கும். தண்ணீர்ப் பஞ்சம் இல்லாததால் அதிக குதூகலத்தோடு இருந்தது. அழகிய மூலிகைப் புஷ்பங்கள் அங்கு இருந்தன. அதில் ஒன்று ஊதா நிறத்தில் இருக்கும். இந்தப் பூவைப் பற்றி இதுவரை மனிதர்கள் காதுக்குக் காது வழிச் செய்தியாகக் கூட போய்ச் சேரவில்லை. இதன் மருத்துவத் தன்மை என்னவென்றால் எவ்வித நோயும் உண்டானால் இருபது

வினாடியில் சரியாகி விடும். மிருகங்கள் ஏதாவது ஓர் எதிரி மிருகத்தின் தாக்குதலால் காயம் ஏற்பட்டாலோ, கால்கள் ஏதாகிலும் பாதிப்படைந்தாலோ கஷ்டப்பட்டு இந்தப் பூ இருக்கும் இடத்துக்கு வந்து சேரும். பூக்கள் பூத்திருக்கும் இடத்தில் பூக்களின் மேலேயே விழுந்து புரண்டு எழுந்திருக்கும். அதன் விளைவாகக் குணமடைந்து தன் இருப்பிடம் சென்று சேரும். இந்தப் பூ இந்தக் காட்டில் இருப்பதால்தான் காடு எப்பொழுதும் வறட்சியைக் காண்பதில்லை; பசுமையோடு இருக்கிறது என்று ஒரு சில வயதான விலங்குகள் சொல்லித் திரிவது உண்டு. இந்த மலருக்குப் பெயர் ஊதா மலர். இது நான்கு வருடத்திற்கு ஒருமுறைதான் பூக்கும்.



இப்படிப்பட்ட ஓர் அழகிய நந்தவனத்திற்கு ஒரு சோதனை வந்தது. சூரியன் தன் வெப்பத்தை அதிகமாக்கி அனைத்து நீரையும் உறிஞ்சிக் குடித்து முடித்துவிட்டது. அங்கு வறட்சிக் காலம் உருவானது. அங்குள்ள அனைத்து ஏரிகளிலும் குளங்களிலும் ஓடைகளிலும் நீர் வற்றியது. காட்டின் நடுப்பகுதியில் ஓடிக்கொண்டிருந்த ஆற்றிலும் தண்ணீர் வற்றி எங்கும் வெப்பத்தின் அனல் காற்று வீசத் தொடங்கியது. அனைத்து விலங்குகளும் மரங்களும் குளிர்காலம் வந்தால் எல்லாம் சரியாகி விடும் என நம்பின. ஆனால் அந்த நம்பிக்கையும் வீண் போனது. குளிர்காலம் வந்தது. ஆனால் பனிப்பொழிவும் ஏற்படவில்லை; ஒரு சொட்டு மழையும் இல்லை.

அனைத்து விலங்குகளுக்கும் என்ன செய்வது என்றே புரியவில்லை. ஆனால் ஒரு கரடிக் குட்டியான கிட்டுவுக்கு மட்டும் ஒரு யோசனை தோன்றியது

அனைத்து மரங்களும் குளிர்க் காற்று வீசினால் நிச்சயம் நம் காட்டிற்கு மழை வருமே. மேகங்கள் உரசிச் செல்லும் அளவிற்கு உயர்ந்த மரங்கள்

இருந்தும் மழை வராததற்குக் காரணம் மரங்கள் குளிர்ச்சியை ஏற்படுத்தாததே. அதைச் சரி செய்தால் நிச்சயம் மழை வரும். அப்படி மழை வந்தால் அதனை முறையாகச் சேமித்துப் பாதுகாக்கலாமே என்று யோசனை செய்தது.

அப்பொழுது தன் தாய் தந்தை இருவரும் காட்டை விட்டு இடம் பெயர்வது பற்றிப் பேச ஆரம்பித்தனர். இந்தக் காட்டை விட்டுப் பிரிய கிட்டுவுக்கு மனம் இல்லை. நாளை தன் யோசனையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் இறைவனைப் பிரார்த்தித்துவிட்டு உறங்கியது அந்தக் காட்டின் செல்ல கரடிக்குட்டி கிட்டு.

அடுத்த நாள் புது விடியலுடன் தொடங்கியது. ஒவ்வொரு மரத்திடமும் போய் குளிர்ந்த காற்றை உண்டாக்கச் சொன்னது. அதன் பயன்களையும் எடுத்துச் சொன்னது. அதற்கு மரங்கள் குளிர்ந்த காற்று உண்டாக்க வேண்டும் என்றால் நீர் தேவைப்படுமே. வேரில் இருக்கும் கொஞ்சநஞ்ச நீரையும் செலவழித்து விட்டால் சீக்கிரமாகவே இறந்து விடுவோம். இனிமேல் வாழ்வதே கொஞ்ச நாள்தான். அதையாவது வாழ விடு என்று பதிலளித்தன. அன்று நாள் முழுதும் அலைந்த கிட்டுவுக்கு மிஞ்சியது முட்டாள் கரடி என்ற பட்டம் ஒன்றே.

ஆனால் கிட்டுவின் முயற்சி வீணாகவில்லை. இளம் மரக்கன்றுகள் இத்திட்டத்திற்குச் சம்மதித்திருந்தன. இச்செய்தி கேட்ட மரங்களுக்குப் பொறாமை வந்தது. மரக்கன்றுகள் குறைந்த வேர்களைக் கொண்டது. அதிக வறட்சியைத் தாக்குப் பிடிக்க முடியாது. அப்படி இருக்கும் பொழுது அவைகள் இந்தக் காட்டைப் பாதுகாக்க முயற்சிக்கிறது. அவைகள் குளிர்க்காற்று வீசி மழை வந்தால் பெரிய மரங்களான நமக்கும் சேர்த்துத் தானே கிடைக்கும். ஒருவேளை மழை வராவிட்டால் இளம் மரக்கன்றுகளான நம்முடைய குழந்தைகள் அனைவரும் சீக்கிரம் காய்ந்து போய்விடுவார்களே. அவர்கள் இல்லாமல் நாம் மட்டும் உயிரோடு இருந்து என்ன சாதிக்கப் போகிறோம்? நாமும் சேர்ந்தே குளிர்ச்சியை வெளிப்படுத்துவோம் என்று கிட்டுவின் திட்டத்திற்கு அனைத்து மரங்களும் சம்மதித்தன.

அப்படி மழை வரும்பொழுது அந்த நீரையெல்லாம் தேக்கி வைக்க குளம், ஏரிகளைத் தூர்வார வேண்டும் என்று இடம்பெயர இருந்த யானை கூட்டத்தில் இளவரசனாக இருந்த, தன் நண்பன் ஜம்போவிடம் கிட்டு உதவி கேட்டது. ஜம்போவும் ஒத்துக் கொண்டது. ஒரு பக்கம் தூர்வார, மறுபக்கம் அனைத்து மரங்களும் ஒரே நேரத்தில் குளிர்க் காற்று வீசிட, மழை மேகம் கூடியது. மழை மேகம் கூட அனைவருக்கும் ஒரே மகிழ்ச்சி. எல்லோரும் மழையில் நனைவதற்குத் தயாராய் இருக்க அந்த மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. திடீரென்று மழை மேகங்கள் கலைந்து சென்றன.

மரங்களும் தங்கள் வேர்களில் மிச்சம் இருந்த ஈரத்தில் குற்றுயிரும் குலை உயிருமாய் நின்றிருந்தன. இதைக் கண்ட கிட்டுவுக்குப் பெரிய குற்ற உணர்ச்சி ஏற்பட்டது. நம்மால் தானே இந்தக் காட்டிற்கு இப்படிப்பட்ட

அவலநிலை ஏற்பட்டது. நாளைய பொழுதுக்குள் அனைத்து மரங்களும் காய்ந்து விடுமே. மரங்கள் காய்ந்து விட்டால் மிருகங்கள் மற்றும் பறவைகளின் நிலை என்னவாகும்? என்ன செய்யப் போகிறோம்? என்று யோசித்த படியே தவித்துக் கொண்டிருந்த கிட்டுவுக்கு அப்பொழுதுதான் அந்த ஊதா மூலிகைப் பூவின் ஞாபகம் வந்தது.

யானைக் கூட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஒரு கூட்டத்தை அனைத்து மரங்களின் வேர்கள் வரை குழி தோண்ட சொல்லிவிட்டு மற்றொரு கூட்டத்தை வறட்சியிலும் பூத்திருத்த ஊதா நிற மூலிகைப் பூவைக் கொண்டு வரச் சொல்லியது கிட்டு. களைப்பாய் இருந்த யானைக் கூட்டம் இதையும் செய்து முடித்தது. பிறகு கொஞ்சம் தெம்பு கொண்ட மரங்கள் சற்று நிம்மதி அடைந்த நேரத்தில் மீண்டும் மேகக் கூட்டம் கூடியது. இந்த முறை கிட்டு எதுவும் யாரையும் செய்யுங்கள் என்று கூறவில்லை. வாழ்வோ சாவோ கடைசி முயற்சியாக நாம் அனைவரும் ஒரே நேரத்தில் குளிர்க் காற்றை எழுப்புவோம் என்று மரங்கள் அனைத்தும் முயற்சி செய்தன. மின்னல் வெட்டியது. இடி இடித்து மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. காடு முழுக்க திருவிழா போல் மரங்களும் செடிகளும் பறவைகளும் மிருகங்களும் மகிழ்ச்சியைக் கூச்சலிட்டுக் கொண்டாடிக் கொண்டிருந்தன.

கிட்டுவின் கண்ணில் வடிந்த ஆனந்தக் கண்ணீர் மழைநீரில் கலந்து, தூர் வாரப்பட்ட குளத்தில் போய்ச் சேர்ந்தது. காடே திருவிழா கொண்டாடி எவ்வளவு நாளாகி விட்டது. இந்தத் திருவிழாவிற்கு நம்ம கிட்டுதான் கதாநாயகன் என்று யானைகள் தும்பிக்கையால் தூக்கி தம்மேல் வைத்து மழையிலே ஊர்வலம் புறப்பட்டன. கிட்டுவை மனதார நீங்களும் வாழ்த்துங்கள் !

– மதுரம் ராஜ்குமார்

**ஆசிரியர் குறிப்பு** இவர் சேலம் மாவட்டம் வாழப்பாடியை அடுத்த முத்தம்பட்டியைச் சேர்ந்தவர் . பெற்றோர் செல்வகுமார் – விஜயலட்சுமி தம்பதியினர். இவர் சிறு வயது முதலே கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்டவர். பத்து மணி நேரத்தில் தொடர்ந்து 173 தலைப்புகளில் கவிதை எழுதி சாதனை படைத்துள்ளார். இளம் கம்பன் விருது, கலாம் கனவு நாயகன் விருது, கவிச்சுடர் விருது உட்பட 35 – க்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ளார். ஐந்தாம் வகுப்பு படிக்கும் போதே 'மதிப்புறு முனைவர்' பட்டமும் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து வினாக்கள் உருவாக்குங்கள்.

  எ.கா. காட்டிலுள்ள கரடிக் குட்டியின் பெயர் என்ன?

  - 
  - 
  - 

- தண்ணீர் பஞ்சம் ஏற்படுவதைத் தவிர்க்க என்னென்ன செய்யலாம் என்பதைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.

# வெகுண்ட பேரலை



## சுனாமி

பூகம்ப புத்திரியாய்ப்
பிறந்தவளும் நீயே!
பூலோகம் அழிந்திடவே
புகுந்தவளும் நீயே!

ஆழிப் பேரலையாக
ஆனவளும் நீயே!
ஆயிரம் பல்லாயிரமாய்
அழித்தவளும் நீயே!

பேரலையாய் உருவெடுத்த
பேய்மகளும் நீயே!
பேரிடரை உலகிற்கே
புகுத்தியவள் நீயே!

சுனாமி எனும்பெயரினையே
தரித்தவளும் நீயே!
பினாமியே எமனுக்குப்
பேரெடுத்தாய் நீயே!

அன்னை தெய்வம் என்றவரை
அழித்தவளும் நீயே!
அன்பில்லா அரக்கியென
ஆனவளும் நீயே!

– உதயை மு. அழகிரிசாமி

**ஆசிரியர் குறிப்பு** இவர் திருவாரூர் மாவட்டம் உதய மார்த்தாண்டபுரம் எனும் ஊரில் பிறந்தவர். தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார். முற்போக்கு பொதுவுடைமை கருத்தாளரான இவர் பல்வேறு நூல்களை இயற்றியுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- ஆசிரியர் சுனாமியை எவ்வாறெல்லாம் பெயரிட்டு அழைக்கிறார் என்பதைப் பாடலை வாசித்துக் கண்டறிந்து எழுதுங்கள்.
  எ.கா: பூகம்ப புத்திரி
- பாடலின் கருத்துகளை உரைநடையில் எழுதுங்கள்.
- முதல் எழுத்து ஒரே போல் வரும் சொற்களைப் பாடலில் இருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்.
- பிரித்து எழுதுங்கள்
  - பேரலை
  - அன்பில்லா
  - பல்லாயிரம்
  - பேரெடுத்தாய்
  - உருவெடுத்த
- சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பற்றிய செய்திகளைச் சேகரித்து, செய்தித்தொகுப்பாக உருவாக்கி வகுப்பறையில் வெளியிடுங்கள்.

## 'சுனாமி' என்றழைக்கப்படும் கடல் கொந்தளிப்பு

நில நடுக்கத்தால் ஏற்படக்கூடிய கொந்தளிப்பு அலைகளே சுனாமி என்று அழைக்கப்படுகின்றது. இதனை நிலநடுக்கத்தின் குறும்புக் குழந்தை என்றும் சொல்லலாம். கடலுக்கு அடியில் ஏற்படும் பூகம்பத்தாலும் எரிமலை வெடிப்பாலும் மிகப்பெரிய விண்கற்கள் கடலில் விழுவதாலும் சுனாமி உருவாகின்றது. அதாவது கடலின் அடிப்பகுதியில் உள்ள நிலப்பரப்பு மேலாக உயர்த்தப்படுவதாலோ அல்லது கீழ்நோக்கித் தள்ளப்படுவதாலோ மாற்றம் ஏற்படுகிறது. அப்போது புவியீர்ப்பு நிலையைச் சமன் செய்வதற்காகத் தண்ணீர் கீழ்நோக்கி இழுக்கப்படுகிறது. இதனால் சுனாமி அலைகள் உருவாகின்றன.

இந்த அலைகள் உருவான இடத்தில் இருந்து விரிவடைந்து நாலாப்புறமும் பயணம் செய்கின்றன. கடல் நீரின் உள்பகுதியிலேயே பயணம் செய்யும் இந்தச் சுனாமி அலைகள் பல நூறு கிலோ மீட்டர் நீளம் கொண்டவையாக இருக்கும்.

கரையை நெருங்கும் போதுதான் இவை தலையைக் காட்டும். இந்த அலைகள் மணிக்கு எழுநூறு கிலோ மீட்டர் வேகத்தில் பயணம் செய்யும். கடலையொட்டிய நிலப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்படும் போது சுனாமி அலைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.



நிலத்தின் ஆடை கடல்
நிலத்தின் மணிமகுடம் மலை
நிலத்தின் வெடிப்புதான் ஆறு
நிலத்தின் அணிமணிகள் தாவர வகைகள்"
என்றும் சொல்லலாம்.

சுனாமி என்பது ஜப்பானிய மொழி வார்த்தை. சு+னாமி தான் சுனாமி. 'சு' என்றால் துறைமுகம். 'னாமி' என்றால் பேரலை என்று பெயர். சுனாமி என்பது துறைமுக அலை. சில நிமிடங்கள் முதல் சில நாட்கள் வரை கூட, அதுவும் பல்லாயிரக்கணக்கான ராட்சச அலைகளை உருவாக்கக் கூடியதுதான் சுனாமி.

புயல், சூறாவளியின் போது கடல் கொந்தளிப்பதற்கும் சுனாமிக்கும் தொடர்பில்லை. இது நன்றாக வெயில் காய்ந்து கொண்டிருக்கும் போது கூட ஏற்படும். பூகம்பம் எப்போது ஏற்படுகிறதோ, அப்போதும் ஏற்படக்கூடியதான வாய்ப்புண்டு.

உண்மையில் துறைமுகம் என்றால், கப்பல்கள் நிற்பதற்கேற்ப ஓரளவு ஆழம் உள்ள கடல்பகுதி. அது கரையை ஒட்டி இருக்கும். பொதுவாக, அதைத்தான் துறைமுகம் என்பர். கடலாழத்தில் இந்தச் சுனாமி அலை ஏற்படுகிறது என்றாலும், துறைமுகத்தில் வந்தவுடன்தான் வீறுகொண்டு எழும். அதனால்தான் துறைமுக அலை என்று பெயர். இது கரையை ஒட்டிய எந்தக் கடல்பகுதியையும் தாக்கும்.

சுனாமி பூகம்பத்தால் ஏற்படுகிறது. அதாவது, பூகம்பம் என்பது நிலப்பகுதியில், கடல் பகுதியில், மலைப்பகுதியில் ஏற்படும். நிலப்பகுதியில் வந்தால் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது. கடலில் வந்தால் கடலின் ஆழ்ப்பகுதி பாதிக்கப்படுகிறது. மலையில் வந்தால், மலையில் எரிமலையாக உருவெடுக்கிறது.

கடலின் ஆழத்தில் பூகம்பம் ஏற்பட்டால் சேதம் அதிகமாக இருக்கும். பூகம்பம் என்பது பொதுவானது. நில, நீர்ப் பகுதிகளைத் தாங்கும் "பரப்புத் தகடுகளில்"

**சுனாமி வருவதற்கான காரணங்கள்**

- கடலாழத்தில் ஏற்படும் பாதிப்புகள்.
- கடலாழ பூகம்பம்.
- கடலை ஒட்டிய நிலப்பகுதியில் ஏற்படும் பூகம்பம்.
- எரிமலையில் ஏற்படும் இயக்கம்.
- கடலில் ஏற்படும் இயற்பியல் மாற்றங்கள்.

ஏற்படும் லேசான அதிர்வுகள் இடம்பெயர்வதால் ஏற்படுகின்றன.

நிலத்தில் ஏற்பட்டாலும் மலையில் ஏற்பட்டாலும் கடலில் ஏற்பட்டாலும் பூகம்பத்தின் விளைவுகள் மற்றவற்றில் ஏற்பட வாய்ப்புண்டு. நிலத்தில் ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவு, கடலாழத்தில் சுனாமியை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

– முனைவர் இ.கே.தி. சிவகுமார்

**ஆசிரியர் குறிப்பு** இவர் ஒரு வேதியியலாளர் ஆவார். அண்ணா பல்கலைக் கழகத்தில் நேனோ அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையத்தில் வருகைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தற்போது செராமிக் தொழில் நுட்பத் துறையில் பணியாற்றி வருகிறார். 'வளரும் அறிவியல்' என்ற இதழின் ஆசிரியராகவும் உள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து, 'சுனாமி' பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி திரட்டி உதவுவதற்காகத் துண்டுப்பிரசுரம் தயார் செய்யுங்கள்.
- சுனாமியைப் போன்ற இயற்கைப் பேரிடர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்
  - நாலாப்புறமும்
  - வீறுகொண்டு
  - கொந்தளிப்பு

  எ.கா: எங்கள் ஊரின் நாலாப்புறமும் வெள்ளப் பெருக்கால் தண்ணீர் சூழ்ந்தது.
- எதிர்ச் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்
  - தாழ்ந்த
  - லேசான
  - உள்பகுதி
  - கீழ்நோக்கி



## கலிவரின் பயணம்

புயலடித்த ஓர் இரவில் ஒரு கப்பல் கடலில் மூழ்கியது. அதிலிருந்த பயணிகளுள் லெமூல் கலிவர் தவிர மற்றவர்கள் அனைவரும் கடல் நீரில் மூழ்கி விட்டனர். கலிவர் நீச்சலில் தேர்ச்சி பெற்றவன். பல மைல்கள் நீந்திச் சென்று கரையை அடைந்தான். நீந்திக் களைத்ததால் அங்குத் தங்கி முதலில் இளைப்பாறிவிட்டு பின்னர்

உணவைத் தேடலாம் என்று எண்ணி அங்குப் படுத்தான்.




ஒரு நாள் முழுவதும் படுத்து உறங்கினான். சூரிய வெப்பம் தாக்கியபோது கலிவர் கண் விழித்தான். அங்கிருந்து நகர முயற்சி செய்தான். ஆனால், அவனால் முடியவில்லை. அவன் தலைமுடி, கைகள், கால்கள் உடல் எல்லாமே தரையோடு பிணைக்கப்பட்டிருந்தன. மிகச்சிறிய மனிதர்கள் அவனைச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தனர்.

ஒருவன் மிகச்சிறிய ஏணியைக் கொண்டு வந்து அதன் மீது ஏறினான். கலிவரின் கட்டை விரல் நகத்தளவே இருந்த அவன் கலிவரின் காதுகளுக்கு அருகே வந்தான். "நீங்கள் லில்லிபுட் என்ற நாட்டில் இருக்கிறீர்கள். நாங்கள் லில்லிபுட் வாசிகள். எங்களுடைய அரசரிடம் உங்களை அழைத்துச் செல்லுகிறோம். தயவு செய்து இடையூறு செய்யாமல் எங்களுடன் வாருங்கள். பிரச்சினை செய்தீர்களானால் நீங்கள் கொலை செய்யப்படுவீர்கள்" என்ற அவனுடைய பயமுறுத்தலைக் கேட்டு முதலில் கலிவருக்குச் சிரிப்பு வந்தாலும் அதை அடக்கிக் கொண்டு அந்தச் சிறுமனிதன் கூறியதற்கு உடன்பட்டான். சாதாரண ஆளான கலிவர் அந்த மிகச்சிறிய மனிதர்களிடையே பெரிய ராட்சதனைப் போல் காணப்பட்டான். மிகப்பெரிய வண்டி கலிவருக்கு அருகில் கொண்டு வரப்பட்டது. மிகுந்த போராட்டத்திற்குப் பிறகு அவர்கள் கலிவரை வண்டியில் ஏற்றினார்கள். லில்லிபுட்டின் தெருக்கள் வழியாக மக்கள் இருபுறமும் நின்று ஆரவாரிக்க கலிவர் வண்டியில் இழுத்துச் செல்லப்பட்டான். திருவிழா போன்ற சூழ்நிலையில் அந்த மக்களின் ஆரவாரத்தைக் கண்டு கலிவர் குதூகலம் அடைந்தான்.

முடிவில் அவர்களுடைய அரசரின் அரண்மனையை அடைந்தார்கள். அரசரே நேரில் வந்து அவனை வரவேற்றார். "உன்னைக் காண்பதற்கே வியப்பாக இருக்கிறது. நீ இங்கேயே தங்க விரும்பினால் இங்குள்ள என் மக்களுக்கு உதவியாக இருக்க வேண்டும்" என்று தன் மக்களைச் சுட்டிக் காட்டியபடி அரசர், கலிவரிடம் கூறினார். "என்னைப் பிணைத்திருக்கும் கயிறுகளிலிருந்து விடுவித்தால் நீங்கள் கூறும் எந்த நிபந்தனைக்கும் நான் உடன்படுகிறேன்" என்று கலிவர் மிகுந்த மரியாதையுடன் கூறினான்.

உடனே கலிவருக்கு விடுதலை கிடைத்தது. அவனுக்குப் பசியாற உணவும் பருகுவதற்கு நீரும் கொடுக்கப்பட்டன. அவனுக்காக ஒரு வீடு கட்டப்பட்டது. லில்லிபுட் மக்கள் அதை ஒரு மகத்தான பணியாகக் கருதினர். கலிவருக்கு எந்தத் தொண்டு புரியவும் அவர்கள் தயாராக இருந்தனர். அவர்களுடனேயே வசித்த கலிவர் சிறுசிறு பணிகளில் அவர்களுக்கு உதவியாக இருந்தான்.

லில்லிபுட்டின் அண்டை நாடான பிளியூஸ் இவர்களுடன் நட்புறவாக இல்லை. ஒருமுறை அந்நாட்டரசன் லில்லிபுட்டின் மீது போர் தொடுத்தான். நூறு கப்பல்களில் தன் படையோடு வந்து தாக்கினான்.



லில்லிபுட் வாசிகள் அனைவரும் திரண்டு, கலிவரிடம் ஓடி வந்தனர். அவனுடைய உதவியைக் கேட்டனர். "எங்களை இப்போது கைவிட்டு விடாதே கலிவர். உன்னுடைய சேவை இப்போது எங்களுக்குத் தேவை" என்று அந்நாட்டு அரசர் கலிவரிடம் கேட்டுக் கொண்டார்.

கலிவர் கடலை நோக்கிச் சென்றான். நீண்ட கயிற்றால் நூறு கப்பல்களையும் சேர்த்துக் கட்டினான். கயிற்றைக் கடலுக்குள் இழுத்தான். நாள் முழுவதும் இவ்வாறே எதிரியின் கப்பல்களை விடாமல் கலிவர் மாற்றி மாற்றி இழுத்துக் கொண்டே இருந்ததால் பிளியூஸ் நாட்டுப் படைவீரர்கள் மிகவும் அலைக்கழிக்கப்பட்டுக் களைப்படைந்தனர். மிகவும் தளர்ந்து போன அவர்கள் போரிடுவதற்கான வலிமையை அறவே இழந்தனர்.

பிளியூஸ் நாட்டு மன்னன் இரு நாடுகளுக்கிடையே சமாதானம் ஏற்பட விரும்பினான். லில்லிபுட் அரசனிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டான். லில்லிபுட் அரசர் அதை ஏற்றுக்கொள்ளவே போர் முடிவுக்கு வந்தது. கலிவர், லில்லிபுட் மக்களால் நாயகனாகப் போற்றப்படவே அங்கேயே பல ஆண்டுகள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான்.

தமிழாக்கம் – லக்ஷ்மி விஸ்வநாதன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து வினாக்கள் உருவாக்குங்கள்

  எ.கா : ◆ கப்பலிலுள்ள பயணிகளில் உயிர் பிழைத்தவர் யார்?
  ◆
  ◆
  ◆

- அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.

  ◆ குதூகலம் ◆ தேர்ச்சி ◆ இளைப்பாறி ◆ பிணைத்திருக்கும்

- ஓர், ஒரு போன்றவற்றைத் தகுந்த இடத்தில் இடுங்கள்.

| | |
|---|---|
| ◆ ஓர் இரவு | ◆ ............ அரசன் |
| ◆ ஒரு கப்பல் | ◆ ............ நாடு |
| ◆ ............ நாள் | ◆ ............ ஊரில் |
| ◆ .............. வீடு | ◆ ............ முறை |

- இக்கதைப் பகுதியை நாடகமாக நடித்து வகுப்பில் வெளியிடுங்கள்.

அலகு 5

# விழித்திடு! வாழ்ந்திடு!



மனித வாழ்க்கைக்கு நிலம், காற்று, உணவு ஆகியவை மிக முக்கியமானதாகும். ஆனால் இன்று மனிதனின் தவறான செய்கைகளால் நிலத்தாயும் உயிர்க்காற்றும் உண்ணும் உணவும் பல நிலைகளில் மாசடைகின்றன. இம்மாசுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

# உயிரும் உணர்வும்





## சுற்றுப்புறச் சுத்தம்

வீசும் காற்றில் தூய்மையை
விரும்பும் மக்கள் யாவரும்
வீடும் வெளியும் சுத்தமாய்
வைத்துக் கொள்ள வேண்டுமே!

வெயிலின் கொடுமை குறைந்திட
வீதி வீடு ஓரமாய்
நிழலைக் கொடுக்கும் மரங்களை
நிறைய வளர்க்க வேண்டுமே!

மழையும் பெய்தால் நீர்வளம்!
மண்ணில் பசுமைப் புரட்சியே!
தழைத்து வளரும் செடிகொடி
தாவரங்கள் சொத்துதாம்!

கடவுள் தந்த நன்மைகள்
காத்து வந்தால் உண்மையாய்
இடர்கள் என்னும் தொல்லையே
எவையும் உலகில் இல்லையே!

வீசும் காற்றில் தூய்மையை
விரும்பும் மக்கள் யாவரும்
வீடும் வெளியும் சுத்தமாய்
வைத்துக் கொள்ள வேண்டுமே!

– பூவை அமுதன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் செங்கற்பட்டு மாவட்டம் சிங்கராயபுரத்தில் செப்டம்பர் 6, 1932–இல் பிறந்தார். இவரது பெற்றோர் அரங்கநாதன் – காமாட்சியம்மாள் ஆவர். உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய இவர் அறுநூறுக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளார். நிலாப்படகு, புலரும் பொழுது, அழகுமலர் போன்றவை இவரது குறிப்பிடத்தக்க படைப்புகளாகும். குழந்தை இலக்கிய மாமணி, கவிமாமணி, கவிஞர் திலகம் உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலில் முதல் எழுத்து ஒரே போல் வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- ஆரோக்கியமாக வாழ கவிதையில் கூறப்பட்டுள்ளவற்றைக் கண்டுபிடித்து வரிசைப்படுத்தி எழுதுங்கள்.
- உங்கள் பள்ளியில் நடைபெற இருக்கும் பசுமை மன்றத்தின் துவக்க விழாவைப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு, சுவரொட்டி தயாரியுங்கள்.
- கோடைக்காலத்திலும் மழைக்காலத்திலும் சுற்றுப்புறத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பட்டியலிடுங்கள்.

## காற்றைக் கெடுக்காதே!

ஒருநாள் ஞாயிறு மாலை ஐந்து மணி இருக்கும் ! உயிரியல் மாமாவும் இளம் ஆய்வாளர்களும் உயிரியல் பூங்காவில் அமர்ந்தவாறே, பேசிக் கொண்டிருந்தனர்.

"நல்ல காற்று! முல்லை நறுமணம் நன்கு வீசுகிறது!" என அங்கு வீசிய மென்காற்றில் மனதைப் பறிகொடுத்துத் தன்னை அறியாமல் கூறினாள் அருண்மொழி.

"ஆமாம்! சில்லென்ற மென்காற்று மேனியைத் தழுவும் இன்பம் எல்லையற்றதுதான்! அதுவும், முல்லையின் நல்ல மணத்தைக் கொள்ளை கொண்டல்லவா நமக்குத் தருகிறது! சொல்லண்ணா மகிழ்ச்சிதான் ! என்றாலும், அந்த மகிழ்ச்சியுடன் கலக்கின்ற துன்பத்தை நீங்கள் அறிய மாட்டீர்கள் பிள்ளைகளே! அறியமாட்டீர்கள்!" என்றார் உயிரியல் மாமா!

"அந்த அளவுக்கு என்ன துன்பம் மாமா? கூறுங்களேன்!" என்று பிள்ளைகள் அனைவரும் வினவினர்.

"ஆம்! துன்பம்தான்! அதோ! வானைத்தொடும் அளவுக்கு ஓங்கிப் பெருமிதத்துடன் நிற்கிறது பாருங்கள் ஆலையின் புகை போக்கி! அது வெளி

விடும் புகையைப் பாருங்கள்! அந்த நூற்பாலையின் மேலே முகில் படிந்தாற் போலவே தோன்றுகிறதல்லவா?"

"ஆம்! அதற்கென்ன?"– வளவன் வினவினான்.

"அதற்கென்னவா? நம் வீடுகளில் அடுப்பு எரியும் போது புகை எழுவதை நீங்கள் கண்டிருக்கிறீர்களா?"

"ஓ! நானே அடுப்பைப் பற்ற வைத்து அம்மாவுக்கு உதவியாக இருந்திருக்கிறேன்" என்றாள் அருண்மொழி.

"அப்போது கிளம்பும் புகையை நீ..."

"அப்பப்பா! கண்ணெரிச்சல் தாங்காது.சில வேளைகளில் இருமல் கூட வந்துவிடும் " என்றாள் அருண்மொழி.

"ஏன் கண் எரிகிறது? இருமல்கூட வந்துவிடும் என்கிறாயே! எப்படி?"

"என்ன இருந்தாலும், புகையும் புகையுடன் வரும் சாம்பல் துகளும் நல்ல காற்றில் கலந்து விடுகிறது. மூச்சிழுக்கும் போதும் கண்ணில் படும் போதும் இருமலும் கண்ணெரிச்சலும் வரத்தானே செய்யும்."

"அப்படி என்றால், புகையாலும் சாம்பல் துகளாலும் காற்றுவெளி தூய்மைக்கேடு அடைகிறது எனக் கூறுகிறாயா அருண்மொழி."

"ஆமாம்!"

"நன்கு உணர்ந்து கூறுகிறாய். அதே பணியைத்தான் ஆலைக்குழாயும் செய்கிறது. அது புகையையும் கரித்துகள்களையும் காற்றுவெளியில் கலக்கச் செய்கிறது. அந்த ஆலையின் நூற்புப் பிரிவு, பஞ்சுப் பிரிவு போன்றவை நூலிழைகளையும் நுண்ணிய பஞ்சுத் தூசுகளையும் வெளிப்படுத்திக்



காற்று வெளியில் மிதக்க விடுகின்றன. இவை எல்லாமே காற்று வெளியின் தூய்மையைப் பெரிய அளவில் கெடுக்கின்றன."

"மாமா! இவை மட்டும்தான் காற்றைக் கெடுக்கின்றனவா?"

"நன்றாக வினவினாய் போ! இந்தப் புகையும் தூசுகளும் போதாதென்று பல்வேறுபட்ட தொழிற்சாலைகளும் போட்டியிடுகின்றன. பெரிய தொழிற்சாலைகளில் பூச்சிக்கொல்லி, பயிர்களுக்கேற்ற உரங்கள் ஆக்கப் பெறுகின்றன. அங்கிருந்தும் நச்சுப் புகை நேரடியாகக் காற்றில் கலக்கிறது. பட்டாசு, வெடிமருந்து தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற தீப்பிடிப்பு நேர்ச்சிகளாலும் நச்சுப் புகை காற்றில் கலந்து விடுகின்றது,

எடுத்துக்காட்டாக சில ஆண்டுகளுக்கு முன், நம் நாட்டின் வட பகுதியில் 'போபால்' நகரத்தில் ஒரு பெரிய 'காற்றழிவு' ஏற்பட்டது. அஃதாவது காற்றிலே நச்சுப் புகை கலந்த கொடுமையான நிகழ்வு நடந்தது. உலகமே அதைக் கேட்டுப் பதறியது.

"விளக்கமாகக் கூறுங்கள் மாமா!"

"சொல்கிறேன்! போபால் நகரில் அமெரிக்கத் தொழில் நிறுவனம் ஒன்று வேதியல் தொழிற்சாலை ஒன்றினை நடத்தி வந்தது. அத்தொழிற்சாலையின் கொதிகலனில் இருந்து நச்சுக் காற்று ஒரு முறை வெளியேறி விட்டது. அதன் விளைவு என்ன தெரியுமா? இரண்டாயிரத்து ஐந்நூறு பேர் இறந்து போயினர். கணக்கற்ற கால்நடைகள் இறந்தன. ஆயிரக்கணக்கானோர் இன்றும் நோய்வாய்ப்பட்டு உழன்று கொண்டிருக்கின்றனர். மிகப் பெரிய அழிவு இது."

"மாமா! தொழிற்சாலைகள் அல்லாமல் வேறு வழியிலும் காற்று மாசு படுகிறதா?"



"ஆம்! இன்று நாகரிகம் எனும் பெயரால் தொடங்கி, காற்றை நஞ்சாக்கிக் கொண்டுள்ளது புகை பிடிக்கும் பழக்கம். மேலும் பயிர்களுக்குப் பூச்சி மருந்து அடிக்கிறோம் அல்லவா! அதனாலும் காற்றில் நஞ்சு கலக்கிறது. அதிக அளவு நஞ்சு கலப்பு, பயிர்களுக்கு மருந்து தெளிப்பதால்தான் ஏற்படுகிறது என்று ஆய்வாளர்களும் கூறுகின்றனர்."

"மாமா! மாமா! உந்து வண்டிகள் செல்கின்றனவே, இவற்றின் புகை காற்றைக் கெடுக்கவில்லையா?"

"யார் இல்லை என்று கூறியது? அவைதான் தற்போது போட்டியிட்டுக் கொண்டு உயிர்க்காற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றன."

"எப்படி?"

"அவை இயங்க எரிபொருள் தேவை அல்லவா! அப்பொருள் எரிய வேண்டுமானால்....!"

"உயிர்க்காற்றுத் தேவை!"

"உயிர்க்காற்று இவ்வகையில் எரிக்கப்பட்டு விட்டால் நம் நிலை என்ன ஆவது?"

"அய்யய்யோ!"

"இந்த வழியில் ஒரு வண்டி, ஐந்நூறு கல் (1000 கி.மீ.) தொலைவு செல்ல ஆகும் உயிர்க் காற்று, ஒரு நபர், ஓராண்டு உயிர் வாழத் தேவையான உயிர்க்காற்றுக்குச் சமம். இதை நினைக்கும் போது, இவ்வகை உந்து வண்டிகள் நம் வாழ்நாளைக் குறைப்பன போலத் தோன்றவில்லையா?"

"நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மையே! மேலும்,இவை வெளிக் காற்றையும் பாழாக்குகின்றனவே!'

"இதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். உயிர்க்காற்றைப் பயன்படுத்திக் கொண்டு கரித்துகளையும் கரி வளியையும் வெளிவிட்டு வருவதால் காற்று வெளியும் மாசுபடுகிறது. மக்கள் பயன்படாப் பொருள்கள் எனச் சிலவற்றை எரித்து விடுகின்றனர். இதனாலும் காற்றுவெளி தூய்மை கெடுகிறது."

"மாமா! கரிவளியைப் பயன்படுத்துவதற்குத்தான், மரம், செடி, கொடிகள் உள்ளனவே! நாம் ஏன் அஞ்ச வேண்டும்?"

"ஏன் அஞ்ச வேண்டுமா? சரி! சரி! நீ வாழும் பகுதியில் நீ பார்த்தவரையில், முன்பு இருந்த மரங்கள், தோப்புகள், தோட்டங்கள் இப்போது இருக்கின்றனவா?"

"உம்!... இல்லை!"

"ஏன் இல்லை?"

"தேவை கருதி வெட்டியிருப்பார்கள்! இப்போது அதற்கென்ன?"

"இப்படியே எல்லோரும் வெட்டிவிட்டால் நமக்கு எப்படி உயிர்க்காற்று கிடைக்கும்? சரி! தேவைக்குத்தான் மரத்தை வெட்டுகிறார்களே. எங்காவது ஒரு மரத்தை வளர்க்கிறார்களா? இல்லையே?

மேலும், விலங்குகளுக்கும் உணவாவன மரம், செடி, கொடிகள் தானே! இந்த மரம், செடி, கொடிகள் நிறைந்த நிலங்கள் கூட அழிக்கப்படுவதால், விலங்கினங்கள், மற்றும் பல்வகை உயிரினங்கள் வாழத் தேவையான உயிர்க்காற்றுத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை எதிர்காலத்தில் கட்டாயம் ஏற்படும். நம் வாழ்வும் வினாக்குறி ஆகும்.

அய்யய்யோ ! இது பெரும் சிக்கல் அல்லவா??

"நிறுத்து! இன்னொன்றையும் கவனிக்க வேண்டியுள்ளது. இத்தகைய சூழலில் மக்கள் தொகையும் உயர்கிறது; அவர்களுக்குத் தேவையான வண்டிகளின் தேவையும் உயர்கிறது; குடியிருப்புத் தேவையும் கூடுகிறது; உணவுப் பொருள் தேவையும் கூடுகிறது.

இத்தேவைகளின் அடிப்படையில், காடுகள் அழிக்கப்படுவதும் தனிமரம், செடி, கொடிகள் வளர்க்கப்படுவது குறைவதும், வயல்வெளிகள் வீட்டுமனைகளாகவும், தொழிற்சாலைகளாக மாற்றப்படுவதும் தொடர்கின்றன. இவற்றை நாம் குறைக்கக் குறைக்க, நம் வாழ்வு அச்சமில்லா வாழ்வாகும்; அகம் மகிழும் வாழ்வாகும்; அமைதியான வாழ்வாகும்; எல்லாத் தேவைகளையும், எல்லாரும் பெறும் சூழல் உருவாகி,வாழ்வு வளமாகும்."

"அடேயப்பா ! காற்றில் ஏற்படும் கலப்பினால் எவ்வளவு தொல்லைகள் நமக்கு! நினைத்தால் மூளையே குழம்பிவிடும்போல் இருக்கிறதே."

"பிள்ளைகளே! இயன்றவரை எதிர்காலத் தலைமுறையான உங்களைப் போன்றவர்கள்தாம் இவற்றிற்கு ஒரு முடிவு கட்டவேண்டும்!" என்று உயிரியல் மாமா உணர்வு பொங்கக் கூறி முடித்தார். பிள்ளைகளின் ஆர்வத்திற்கு மட்டும் குறைவா என்ன? பூங்காவை இருள் மெல்ல கவ்வத் தொடங்கிற்று; எல்லோரும் பேசியவாறே வீடு திரும்பினர். பொன்மாலைப் பொழுது பொன்னை விடக் கூடுதலாக மதிக்கப் பெற்றது.

– பாவலர் தமிழியக்கன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் புதுச்சேரியில் 24.02.1946–இல் பிறந்தார். பெற்றோர் கி. இராமு, இராசம்மாள் ஆவர். இவர்தம் இயற்பெயர் இரா. வெங்கடபதி. நல்லாசிரியர் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார். உயிரியல் பாட்டு, எழுச்சி விதைகள், உயிரியல் மாமாவின் அறிவியல் கதைகள், எழிலின் சிரிப்பு போன்றவை இவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கவையாகும்.

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் காற்றை மாசுபடுத்தும் காரணிகளைப் பட்டியலிடுங்கள்.
- காற்று மாசுபாட்டைத் தடுக்கும் விதத்தைக் குறித்து நடைபெற இருக்கும் விழிப்புணர்வு முகாமிற்கான நிகழ்ச்சி நிரல் தயாரியுங்கள்.
- உங்களது சுற்றுப்புறத்தை உற்றுநோக்கி காற்று மாசடையும் சூழலைக் கண்டறிந்து குறிப்பு எழுதுங்கள்.

## காற்றினைத் தூய்மை செய்

காற்று மாசுபடாமல் தூய்மையாக வர முயற்சி செய்!

அந்தப் பகுதியில் புதிதாக உர ஆலை ஒன்று வர இருந்தது. அதனை முதன் முதலில் எதிர்த்தவர் மருதுவின் அப்பா சுந்தரம் தான்.

ஊர் மக்களைக் கூட்டிப் பேசினார்.

"உரஆலை வெளியிடும் புகைமாசு கொடிய நஞ்சு கலந்ததாக இருக்கும். இந்தப் புகையினை நாம் சுவாசித்தால் நம் உயிருக்கே ஆபத்தாகவும் முடியும்" என்றார். ஊர் மக்கள் திகிலுடன் அவரைப் பார்த்தனர்.

அவரே தொடர்ந்தார்.

"அதோட நின்னுடாது... அதன் பிறகு நம்ம பூமியில் பிறக்குற குழந்தைகள் எல்லாம் ஊனமாயும் பிறக்கும்" என்றார்.



"அய்யய்யோ" என்று அலறினர் மக்கள்.

அதன்பின்னர் அவர் சொன்னபடியே மக்கள் போராட்டத்தில் இறங்கினர். கடையடைப்பு நடத்தினர். ஊர்வலம் நடத்தினர். மாவட்ட ஆட்சியரிடம் சென்று மனு கொடுத்தனர்.

அதோடு அந்த நிறுவனத்தின் மீது வழக்கும் தொடர்ந்தனர்.

அதனால் உர ஆலைக்கான அனுமதிக்குத் தடை விதிக்கப்பட்டது.

அந்த நிறுவனம் இதற்கெல்லாம் காரணம் சுந்தரம்தான் என அறிந்தது.

"அந்தச் சுந்தரம் அந்த ஊருல இருக்கக் கூடாது. கையைக் காலை உடையுங்கள்." என்றது நிறுவனம்.

சுந்தரம் குறி வைக்கப்பட்டார்.

ஒருநாள் தாக்கப்பட்டார். அந்த வழியாக வந்தவர்கள் சுந்தரத்தைத் தூக்கிச் சென்று மருத்துவமனையில் சேர்த்தனர்.

உயிருக்கு ஆபத்து இல்லை; காலில் மட்டும் பலத்த காயம். சிலகாலம் நடக்க முடியாமல் போனது.

மருது அப்பாவைப் பார்த்து வருந்தினான். அம்மாவோ அழுது அடம் பிடித்தாள்.

"பொழைச்சதே பெரிய பொழைப்பு... இனியும் போராட்டம் அது இதுன்னு

போக வேண்டாம். யாரு எப்படி எங்கே கெட்டுப் போனா நமக்கு என்ன?" என்றாள்.

"அப்படியெல்லாம் விட்டுவிட முடியாது!" என்றார் அப்பா.

"சொன்னாக் கேட்கமாட்டீங்க... உங்களை இழந்துவிட்டு நானும் எம் பையனும் தெருவில நிக்க வேண்டியதுதானா?" என்றாள் அம்மா.

"நான் ஊரைப் பற்றிக் கவலைப்படறேன்... நீ என்னடான்னா உங்களைப் பற்றிக் கவலைப்படறே?" என்றார் அப்பா.

மருது பேசினான்.

"அப்பா...! அம்மா சொல்றதைக் கேளுங்கப்பா...." என்றான்.

"மருது.... அம்மாவுக்குப் படிப்புக் கிடையாது. பயப்படறா... நீ படிச்சவன். எப்படிப் பயப்படலாம்?" என்றார்.

மருது பேசவில்லை.

அப்பா விளக்கினார்.

"மருது..... நான் சின்ன வயசா இருந்தப்ப நிலத்தடிநீர் சுத்தமா இருந்தது. குழாயில அடிச்சு நாங்க அப்படியே குடிப்போம். இன்னிக்கு நிலத்தடி நீர் உவர்ப்புச் சுவையா இருக்கு... நம்ம தண்ணியை நாமே விலைக்கு வாங்கிக் குடிக்கிறோம்.... இது எதனால நடந்தது. இதுல மிகப்பெரிய சதியே இருக்குது" என்று நிறுத்தினார். அப்பாவையே பார்த்தான் மருது.

"இன்னிக்குக் காற்றை மாசுபடுத்தற வேலைகளும் நடந்துகிட்டு இருக்கு... இதை நாம் விட்டுட்டா இன்னும் கொஞ்ச நாள்ல, காற்றை விலைக்கு வாங்கி, அந்தச் சிலிண்டரை நாம் முதுகில் சுமந்து கொண்டு அலையிற நிலையும் வரலாம். அதனால்தான் இந்தப் போராட்டங்களெல்லாம்" என்றார்.

மருதுக்கு அப்பா சொன்னது புரிந்தது. திகிலுடன் பார்த்தான்.

"ஆமாப்பா.... போராடித்தான் ஆகணும்" என்றான்.

– நல்லாமூர் முனைவர் கோ. பெரியண்ணன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் விழுப்புரம் மாவட்டம் திண்டுவனம் வட்டம் நல்லாமூரில் 1946–ஆம் ஆண்டு மார்ச் 15–ஆம் நாள் பிறந்தார். சிறந்த மேடைப் பேச்சாளரான இவருக்குக் கிராமிய பாடல் வித்தகர், திருக்குறள் மாமணி என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு.

## செயல்பாடுகள்

- காற்று மாசடைவதால் ஏற்படும் தீமைகள் பற்றிக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- காற்று மாசடையும் சூழ்நிலைகளை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.
- "காற்றை மாசடையாமல் பாதுகாப்பது நமது கடமை" எனும் தலைப்பில் சுற்றுச்சூழல் தினத்தில் சொற்பொழிவு ஆற்ற ஒரு சொற்பொழிவுக் குறிப்பு எழுதுங்கள்.

# அன்னையை அரவணை



## இயற்கையை அழிக்காதே!

மனிதா! இயற்கையை அழிக்காதே!
மண்ணில் அணுஉலைக் கழிவுகளை
மனிதா நீயும் கலப்பதனால்
மாளும் மண்ணின் வளமெல்லாம்!

கடலில் அணுவின் கழிவுகளைக்
கலக்கும் உந்தன் செயலாலே
கடலின் வளங்கள் அழிகிறதே!
கதிர் வீச்சாலே கடலழியும்!

ஆழ்கடல் மற்றும் ஆழ்நிலத்தில்
அணுவின் சோதனை செய்வதனால்
பாழாய்ப் போகும் நிலமெல்லாம்!
பாரீர் நிலநடுக் கங்களை!

விளைச்சல் நிலங்களில் வீடாச்சு!
விளைச்சல் நிலத்தில் தொழிற்சாலை!
விளைச்சல் குறைந்தால் விலையேற்றம்
விடுவா யாஉன் கொடுஞ்செயலை?

ஆழ்கடல் பாறை உடைவதாலே
அடிக்கடி சுனாமி வருகிறதாம்!
ஆழ்நிலம் மனிதச் செயல்களினால்
அழிக்கப் பட்டு நிலநடுக்கம்!

பூமியை மனிதன் உருக்குலைக்கும்
பொல்லாச் செயல்கள் நிற்காதோ?
நாமே நிலத்தைச் சுயநலத்தால்
நாளும் சிதைத்தல் தவறன்றோ?

இறைவன் தந்த இயற்கையினை
இடைவி டாமல் அழிக்கின்ற
வெறியு டைய மனிதர்காள்
வேண்டாம் மீண்டும் விபரீதம்!

– கவிஞர் எஸ். எம். செபாஸ்டின்

**ஆசிரியர் குறிப்பு** இவர் ஆசிரியராகப் பணியாற்றுபவர். பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். இப்பாடல் 'அடித்தட்டு மக்கள் உயர...' எனும் கவிதை புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

## செயல்பாடுகள்

- கவிதையை வாசித்து அதன் கருத்துகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.
- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- முதல் எழுத்து ஒரே போல் வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- பிரித்து எழுதுங்கள்
  - வளமெல்லாம்
  - கடலழியும்
  - ஆழ்கடல்
  - விலையேற்றம்
  - உருக்குலைக்கும்
  - கொடுஞ்செயல்
- இயற்கை அழிவுகளைச் சித்திரிக்கும் கவிதைகளைத் திரட்டி ஒரு மலர் தயாரித்து வகுப்பில் வெளியிடுங்கள்.

## பூமியைக் காப்போம்

அனைத்து உயிர்களையும் காத்துவரும் பூமியை இப்போது நாம் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறோம். இதுவரை பூமி நம்மைக் காத்துவந்தது. ஆனால் படிப்படியாக நாம் பூமியைச் சாகடித்துக் கொண்டிருக்கிறோம். மனிதன் தோன்றுவதற்கு முன்னால் தாவரங்களும் விலங்குகளும் பூமியில் வாழ்ந்த காலத்தில் பூமிக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படவில்லை. பல சுழற்சிகளின் வாயிலாகத்

தாவரங்கள், விலங்குகள் தோன்றுவதும் மறைவதும் பின்னர் பூமிக்கு உரமாகி மீண்டும் உயிர்த்தெழுவதுமாக இருந்து வந்தது. நீர் நிலைகள், ஆறுகள், குளங்கள், கடல் ஆகியவை சுத்தமாக இருந்து வந்தன. பூமி தூய்மையாகத் திகழ்ந்தது. உற்பத்தி செய்யும் தாவரங்கள், உண்ணும் விலங்குகள், உயிரினங்கள் மடிந்தபின் சிதைக்கும் சிதைப்பான்கள் அதனதன் பணியைச் செய்து பூமியின் பரப்பை எப்போதும் போல் வைத்திருந்தன. கழிவுப்பொருள்களை உண்டு வாழ்வதற்காக உயிரினங்கள் நரி, கழுகு, காக்கை போன்றவை இருந்தன. நீர் அசுத்தமடையாமல் அதில் வாழும் உயிரினங்கள் அழுக்கைச் சாப்பிட்டு வளர்ந்தன. காடுகள் தன்னிச்சையாய் வளர்ந்தன. மரங்கள் தானாகவே வளர்ந்து, மடிந்து காட்டு மண்ணுக்கே உரமாயின. மண், வளம் பொருந்தியதாக மாறியது. இந்த நிலை மனிதனின் வருகைக்குப் பின் மெதுவாக மாறத்துவங்கியது.

நாகரிகம் நதிக்கரைகளில் முதலில் தோன்றி, வேளாண்மையில் ஈடுபட்ட மனிதன் குடியிருப்புகளை அமைத்து ஒரே இடத்தில் வாழத் துவங்கினான். அவன் அறிவு பகுத்தறிவு – அவனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டியது. குடும்பம், சமூகக் கூட்டம், குழுக்கள் என்று வளர்ந்து நாடு என்ற அளவுக்குச் சமுதாய அமைப்புகள் உருவாயின.

அவனது பகுத்தறிவால் நாளைய நிலை பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான். தனது தேவைக்குமேல் பொருள்களை விரும்பினான். உணவு, உறைவிடம், உடை ஆகியவற்றில் தனது தேவையை மட்டுமின்றி தனது ஆசையைப் பூர்த்தி செய்தான். இவ்வுலகத்தில் எல்லாருடைய தேவைக்கும் எல்லாம் இருக்கிறது. ஆனால் ஆசையைப் பூர்த்தி செய்யப் போதுமானவை இல்லை என்று நாம் கூறக் கேட்டிருக்கிறோம். இவ்வாறு



ஆரம்பித்த மனிதனது ஆசை, படிப்படியாக இயற்கையின் வளங்களைச் சூறையாட ஆரம்பித்தன.

பல கோடி ஆண்டுகளாக இருந்த மரங்கள் பணம் ஈட்டுவதற்காக வெட்டப்பட்டு விற்கப்பட்டன. காடுகள் அழிக்கப்பட்டன. நிலங்கள் தேவைக்கதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. காடுகள் விளை நிலங்களாக மாற்றப்பட்டன.

மக்கள் தொகை பெருகப் பெருக அதற்கேற்றாற்போல ஆசைகள் பெருக ஆரம்பித்தன.

விளை நிலங்கள் படிப்படியாக அசுத்தமாயின. புதிய வேளாண்மை உத்திகளாகச் செயற்கை உரங்களும் உயிர்க்கொல்லிகளும் (பூச்சிமருந்து) உபயோகப்படுத்தப்பட்டன. இவைகள் நிலத்தின் தன்மையைக் கெடுத்தன.

நிலம் வருணிக்க இயலாத அளவு அசுத்தமாகி விட்டது. தூய்மையான பகுதி என்று நிலப்பகுதியையும் கூற இயலாத நிலையில் நாம் இருக்கிறோம். நாம் உபயோகப்படுத்தும் பொருள்கள் தேவையற்றுப் போனாலோ அல்லது சிதைந்து போனாலோ அவற்றைத் தூக்கி எறிகிறோம். குப்பைகளை நாம் உற்பத்தி செய்கிறோம். சாக்கடைகளை உருவாக்குகிறோம். இவைகள் தரையில் உறிஞ்சப்படுகின்றன. பிற பொருட்கள் தரையில் சர்வசாதாரணமாக வீசப்படுகின்றன. தொழிற்சாலைக் கழிவுகள், தோல் பதனிடுதல், தொழில் கழிவுகள், சயனைடுகள், பாஸ்பேட்டுகள் சர்வசாதாரணமாகத் தரையில் கிடக்கின்றன. பயிர்களுக்கும் களைகளுக்கும் உபயோகப்படுத்தப்படும் மருந்துகள் தரையில்பட்டுத் தாவரங்கள் விஷத்தன்மை அடைகின்றன.

இப்படியாக எங்குப் பார்த்தாலும் நச்சு, நச்சு, நச்சு! தண்ணீரில் நச்சு! காற்றில் நச்சு! தரையில் நச்சு! நச்சுப் பொருள்களை வீசியவன் மனிதன். தாவரங்களோ, மற்ற விலங்குகளோ அல்ல!

பூமியில் மனிதன் தோன்றியிருக்காவிட்டால் ஒரு வேளை பூமி பலகோடி ஆண்டுகளுக்குப் பசுமைக்கோளமாய்ச் சுற்றிக் கொண்டிருக்குமோ! பகுத்தறிவு பெற்ற மனிதன் உலகுக்கு வந்த பின்னரா இது நடைபெற வேண்டும்? உண்மையில் ஒரு முன்னேற்றமல்லவா நடை பெற்றிருக்க வேண்டும். மாறாக மனிதன் தான் வாழும் பூமியையே அழிக்கும் நிலைக்கு வந்து விட்டானே!

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பதை மனதில் கொண்டு பூமியை நாம் காப்பாற்ற வேண்டும். அனைவரும் சேர்ந்து காப்பாற்ற வேண்டும். நம்மைச் சுற்றி மரங்களைப் பெருமளவில் வளர்க்க வேண்டும்.

– ப. உமாபதி

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து அதில் கூறப்பட்டுள்ள இயற்கை வளங்களைப் பட்டியலிடுங்கள்.
- 'பூமியைப் பாதிக்கும் மனித செயல்கள்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்ற குறிப்பு தயாரியுங்கள்
- சேர்த்து எழுதுங்கள்
  - பூமி + அனைத்தும் =
  - அனைத்து + உயிர்களையும் =
  - பெரும் + அளவில் =
  - வாழ்நாள் + எல்லாம் =
- லகர, ழகர, ளகர எழுத்துகள் வரும் சொற்களைப் பாடப்பகுதியில் இருந்து கண்டுபிடித்து வாசியுங்கள். எழுதுங்கள்.
- பூமியைப் பாதுகாக்கும் உணர்வை அனைவரிடமும் ஏற்படுத்தும் வகையில் முத்திரை வாக்கியங்களை எழுதுங்கள்.

### மரப்பெண் சாலுமரத்த திம்மக்கா

சங்க இலக்கியத்தில் தலைவியைக் காண தலைவன் ஒருவன் வருகின்றான். அருகில் வரும் தலைவனைத் தலைவி நாணத்தோடு எச்சரிக்கின்றாள். ஒரு புன்னை மரத்தைத் தலைவனிடம் சுட்டிக்காட்டி "அவள் என் தமக்கை. அவள் முன்னால் உன்னோடு பேசுவதென்பது எனக்கு வெட்கமாக இருக்கிறது" என்கின்றாள். மரத்தைத் தன் சகோதரியாகக் கருதிய சங்ககாலத் தலைவியும் மரத்தைத் தன் பிள்ளையாக வளர்த்த சாலுமரத்த திம்மக்காவும் மரங்களின் மனுசிதான்.



இவர்களின் மனங்களில் மானுடத்தைக் காக்கும் வேர்கள் புதைந்து விரிந்து கிடக்கின்றன என்பதை அறிய முடிகிறது.

திம்மக்கா சாலையின் இரு மருங்கிலும் மரம் நட்டதால் "சாலுமரத்த" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றார். இவர் கர்நாடக மாநிலம் தும்கூர் மாவட்டத்தில் குப்பி தாலூக்காவில் பிறந்தார். இவரின் வயது நூறுக்கு மேல் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. சிறுவயதில் பள்ளிக்கூடம் செல்வதற்கான வாய்ப்பு, திம்மக்காவிற்கு மறுக்கப்படுகிறது. இவரின் இளம் வயதிலேயே சிக்கையா என்பவருடன் திருமணம் நடைபெறுகிறது. சிக்கையா திம்மக்கா தம்பதியருக்குப் பிள்ளைப்பேறு கிடையாது. திம்மக்கா தனக்குக் குழந்தை இல்லை என்ற சோகத்தில் இருந்து விடுபட மரங்களைக் குழந்தைகளாக நேசிக்க ஆரம்பிக்கின்றார். கர்நாடக மாவட்டம் குளிகலுக்கும் குதூருக்கும் இடைப்பட்ட நாற்பத்தைந்து கிலோமீட்டர் நீளமுள்ள நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் முந்நூற்று எண்பத்தைந்து ஆல மரங்களை நடுகின்றார். முதல் வருடம் பத்து மரங்களையும் அதனைத் தொடர்ந்து அடுத்த வருடங்களில் பதினைந்து, இருபது என்று மரங்களின் எண்ணிக்கையை அதிகமாக்கி நட்டுக் கொண்டே செல்கின்றார். திம்மக்காவின் இம்முயற்சிக்கு அவருடைய கணவர் சிக்கையாவும் ஆதரவாக இருக்கின்றார்.

மரம் நடுவது பெரிதல்ல. நட்ட மரங்களைப் பாதுகாப்பது திம்மக்கா தம்பதியருக்கு மிகப்பெரிய சவாலாக இருந்தது. பல கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று, குடங்களில் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றி, மரங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டனர் இத்தம்பதியினர். திம்மக்கா கல்குவாரியில் தொழிலாளியாக வேலை செய்து கொண்டு எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட மரங்களை நட்டுப் பூமிக்குக் குடையாகவும் கொடையாகவும் வழங்குகின்றார். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் குறித்த பெரிய விழிப்புணர்வு கூட்டங்களிலோ, விவாதங்களிலோ திம்மக்கா பங்கேற்கவில்லை. ஆனால், தன் அனுபவ அறிவால், ஆர்வத்தால் மரக்கன்றுகளை நட்டுப் பூமியைப் பாதுகாத்துள்ளார். கர்நாடக அரசானது இவருடைய மரம் வளர்ப்பு சாதனையையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சிந்தனையையும் அறிந்து இவருக்குக் கன்னட ராஜ் யூத்வா, இந்திரா காந்தி ஆகிய விருதுகளை வழங்கிப் பாராட்டி உள்ளது.

1995–ஆம் ஆண்டு திம்மக்காவிற்கு இந்திய அரசின் தேசிய குடிமகள் விருதும் 2019–ஆம் ஆண்டு இந்தியாவில் மிகச்சிறந்த விருதுகளில் ஒன்றான பத்மஸ்ரீ விருதும் வழங்கப்பட்டன. வாழ்நாளெல்லாம் மரம் நடுதலையும் வளர்த்தலையும் பாதுகாப்பதையும் இந்தச் சமூகத்திற்குக் கற்றுக் கொடுத்த சாலுமரத்த திம்மக்காவிற்குக் கர்நாடக மத்திய பல்கலைக்கழகமானது கௌரவ முனைவர் பட்டத்தினை வழங்கிப் பாராட்டி உள்ளது சிறப்பிற்குரியதாகும். கற்றல், கற்பித்தல் என்பது வகுப்பறைகளைத் தாண்டி இயற்கை வளங்களைப் பாதுகாத்தலில் அடங்கியிருக்கிறது என்பதே திம்மக்காவின் வாழ்க்கை நமக்குச் சுட்டும் பாடமாகும்.

1991–ஆம் ஆண்டு திம்மக்காவின் கணவர் இறந்து விட்டார். கணவரின் பெயரால் கிராமத்தில் மருத்துவமனை கட்டவேண்டுமென்பது திம்மக்காவின் விருப்பமாகும். திம்மக்காவின் வெள்ளந்தியான சிரிப்பு, உழைத்துக் களைத்த முகம், மரம் நட்ட மறக்கைகள் இப்படி அனைத்தும் இவருடைய வாழ்வென்னும் மரத்தின் மிகப்பெரிய வேர்களாகும். இவருடைய முதுமைப் பருவத்திலும் மரம் வளர்ப்பு, காடுகள் பாதுகாப்பு இயக்கங்களோடு இணைந்து செயல்படுகின்றார். திம்மக்கா முதுமை அடைந்தாலும் அவர் நட்ட மரங்கள் வளமையுடன் வளர்ந்து மானுட வாழ்க்கைக்குப் புதுமை சேர்க்கின்றன.

– முனைவர் அ. ஆரோக்கிய ஜெயசீலி

**ஆசிரியர் குறிப்பு** இவர் வேலூர் அச்சிலியம் கல்லூரியின் முதல்வர். சங்க இலக்கியம், பெண்ணியம், சிறார் இலக்கியம், சுற்றுச்சூழலியல் போன்ற பலதுறை நூல்களை எழுதியுள்ளார். சூழலியலைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர். இவரது பெண் தன்வரலாற்றுப் பதிவுகள், பசுமைப் பெண்கள் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.
  - பாடப்பகுதியில் 'அவள் என் தமக்கை' எனக் கூறப்படும் மரம் எது?
  - திம்மக்காவின் கணவர் பெயர் என்ன?
  - திம்மக்கா எத்தனை ஆல மரங்களை நட்டுள்ளார்?
  - கர்நாடக அரசு திம்மக்காவிற்கு அளித்த விருதுகள் எவை?
  - திம்மக்காவிற்கு எந்த வருடம் பத்மஸ்ரீ விருது கிடைத்தது?
- திம்மக்கா அவர்களின் சேவையைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த மரங்களின் பெயர்களை எழுதுங்கள்.
- ஏதாவது ஒரு மரத்தின் பயன்களை குறித்துக் குறிப்பு எழுதுங்கள்.
- சாலையில் இரு பக்கங்களிலும் மரங்கள் நடப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா? அதனைக் குறித்துக் கலந்துரையாடி எழுதுங்கள்.
- மரங்களைப் பாதுகாக்கும் அமைப்புகள் எவை எனக் கண்டறிந்து எழுதுங்கள்.

# சுத்தம் சோறு போடும்



## உடம்பு நல்லா இருக்கணும்!

உண்ணும் உணவிலே ஈமோதும்!
ஓடி வந்து தூசி உட்காரும்!
உண்ணும் உணவு கெட்டுவிட்டால் –
அதை உண்ண நினைப்பது கூடாது!

சுத்தமான உணவுகளைச்
சூடு படுத்தி நாம் சாப்பிடணும்!
சூடு ஆறும் முன்னால் அதைச்
சீக்கிரம் மூடியே வைத்திடணும்!

கனிந்த பழத்தைக் காய்கறியைக்
கழுவிக் கழுவிச் சாப்பிடணும்!
அழுகல் பழங்கள் நல்லதல்ல –
அதை உணவில் விலக்கி வைத்திடணும் !

தங்கும் இடத்தைக் கூட்டிப் பெருக்கியே
சுத்த மாக நாம் வச்சுக்கணும்!
தன் சுத்தம் வேண்டும் என்பதை
நாமும் நிச்சய மாக ஒத்துக்கணும்!

உச்சந் தலைமுதல்
உள்ளங்கால் வரை
உடம்பு நல்லா இருக்கணும்!

– குழ. கதிரேசன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் புதுக்கோட்டை மாவட்டம் இராயவரத்தில் 1949 அக்டோபர் 17– ஆம் தேதி குழந்தையன் செட்டியார், விசாலாட்சி தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைப் பாடல்களை எழுதியுள்ளார். சாகித்ய அகாதமி வழங்கும் பால சாகித்ய புரஸ்கார் விருதைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள். (குழுவாகவும், தனியாகவும் )
- உடல்நலத்தோடு தொடர்புடைய கருத்துகளைப் பாடலிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.
- உடல் நலனைப் பாதுகாக்கும் முறைகளைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- உடல் ஆரோக்கியம் பற்றிய பழமொழிகளைத் திரட்டி வகுப்பறையில் வெளியிடுங்கள்.
  எ.கா: கூழானாலும் குளித்துக் குடி
- கடைசி எழுத்து ஒரே போல் வரும் சொற்களைப் பாடலிலிருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்.

## உணவைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம்

நாம் அன்றாடம் பல வகையான உணவுப்பொருட்களை உட்கொள்கிறோம்.

நாம் உட்கொள்ளும் உணவுப்பொருட்களை உழவர்கள் உற்பத்தி செய்கின்றனர். அவற்றை வாங்கி வீட்டில் சமைத்து உண்ணுகிறோம்.

கவனக்குறைவாக இருந்தால் உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்வதிலிருந்து சமைத்து உண்ணும் வரை கெட்டுப்போக நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. இவ்வாறு கெட்டுப்போன உணவுகளை உட்கொண்டால் என்ன ஆகும்? அதனால் நமது உடல் நலம் பல விதங்களில் பாதிக்கப்படும். முக்கியமாக வாந்தி, வயிற்றுப்போக்கு போன்றவற்றால் பாதிக்கப்படுவோம். வேறு பாதிப்புகளும் ஏற்படலாம். சில சமயங்களில் உயிரிழக்கவும் நேரிடும்.

இதுபோன்ற பாதிப்புகள் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? நோய்க் கிருமிகள், நச்சுப் பொருட்கள் ஆகியவற்றால் உணவுப் பொருட்கள் கெட்டுப் போயிருப்பதே இதற்குக் காரணம். இந்த நோய்க் கிருமிகளும் நச்சுப் பொருட்களும் சீரண உறுப்புகளையும் மற்ற உடல் உறுப்புகளையும் பாதிப்பதால் உடல் பலவிதமாகப் பாதிக்கப்படுகிறது.

பொதுவாக எலி, ஈ, புழுக்கள் போன்றவை உணவுப் பொருட்களைக் கெட்டுப் போகுமாறு செய்கின்றன. இவை தவிர பல்வேறு பூஞ்சணங்களினாலும் உணவுப் பொருட்கள் கெட்டுப் போகலாம்.



நாம் பயன்படுத்தும் சில வேதியல் பொருட்களும் உணவுப் பொருட்களைக் கெட்டுப்போகுமாறு செய்கின்றன. முக்கியமாக வீடுகளில் பூச்சிக்கொல்லி மருந்துகளைக் கவனக்குறைவாகப் பயன்படுத்துவதாலும் விவசாயிகள் பயிர்களின் மீது பூச்சிக்கொல்லி மருந்துகளைக் கவனக்குறைவாகப் பயன்படுத்துவதாலும் விதையாகப் பயன்படுத்துவதற்குக் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக உணவுத் தானியங்களுடன் மருந்துகளைச் சேர்ப்பதாலும் சேமித்து வைத்திருக்கும் போது தற்செயலாக வேதிப் பொருட்கள், பூஞ்சணங்கள் ஆகியவற்றால் தாக்கப்படும் போதும் உணவுப் பொருட்கள் கெட்டுப் போகின்றன.

உணவுப் பொருட்களுக்கு நிறம் கொடுப்பதற்கும் பதப்படுத்துவதற்கும் பல வேதிப்பொருட்களைப் பயன்படுத்துகிறோம். இது போன்ற வேதிப் பொருட்களைத் தவறாகப் பயன்படுத்துவதாலும் சில சமயங்களில் உணவுப் பொருட்கள் கெட்டுப் போகலாம்.

உணவில்லாமல் யாரும் உயிர்வாழ இயலாது. ஆனால், கெட்டுப்போன உணவை உட்கொள்வதன் மூலம் ஒருவருடைய உடல் பலவிதமாகப் பாதிக்கப்படுகிறது. எனவே, உணவுப் பொருட்களைக் கெட்டுப்போகாமல் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம்.

– வே. தமையந்திரன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் உடல் நலம் சார்ந்த பல நூல்களை எழுதியுள்ளார். மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி? தோல்விகளைத் தவிர்ப்பது எப்படி? கனவுகளும் பலன்களும், சாமுத்திரிகா லக்ஷணம் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவையாகும். தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசினையும் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து, கெட்டுப்போன உணவுகளை உட்கொண்டால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- ஆரோக்கியமான உணவுகளின் பெயர்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.
- உணவுப் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு அதன் முக்கியத்துவத்தைப் பொது மக்களுக்கு உணர்த்தும் வகையில் ஒரு துண்டுப் பிரசுரம் தயாரியுங்கள்.
- நம் முன்னோர்கள் உணவை எவ்வாறு பாதுகாத்தனர் என்பதைப் பற்றிய தகவல்களைத் திரட்டி வகுப்பறையில் வெளியிடுங்கள்.
- உணவுக் கெடுவதற்கான சூழ்நிலைகள் எவை என்பதைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

## உணவின் அருமை

காளியப்பன் ஹோட்டலில் அன்று கூட்டம் அலைமோதியது. மீன்வறுக்கும் ஷ் ஷ் ஷ் சத்தம் ஒருபுறம், இறால் பொரியல் ஒருபுறம், சிக்கன் வறுவல் ஒருபுறம் எனக் களைகட்டியது.

அவ்வூரில் காளியப்பன் அசைவ ஹோட்டல் என்றால் பிரபலம். பரோட்டா, மீன்குழம்புச் சாப்பாடு, கறிக்குழம்புச் சாப்பாடு என அனைத்தும் சுடச்சுட சுவையாகக் கிடைக்கும். மதியம் முதல் இரவு வரை அசைவ மணம் வீசும்.

எட்டாம் வகுப்புப் படிக்கும் சண்முகத்திற்குப் பள்ளி செல்லும் வழியில் உள்ள காளியப்பன் ஹோட்டலில் சாப்பிட வேண்டும் என்று ரொம்ப நாளாக ஆசை இருந்து வந்தது. ஒருநாள் தன் அப்பாவிடம் தனது ஆசையைக் கூறினான்.

அவனுடைய அப்பாவும் அவனை ஒருநாள் கட்டாயம் அழைத்துச் செல்வதாகக் கூறினார். அந்த நாளும் வந்தது. சண்முகமும் அவனுடைய தந்தையும் காளியப்பன் ஹோட்டலுக்குச் சென்றனர்.



உள்ளே நுழையும் முன்பே வாசனை மூக்கைத் துளைத்தது. ஆளுக்கொரு நாற்காலியில் அமர்ந்தனர். பக்கத்து மேசையை எட்டிப் பார்த்தான் சண்முகம்.

ஒருவர் வாழை இலை நிறைய மீன்வறுவல், சிக்கன் வறுவல், முட்டை, சாப்பாடு என வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார்.

அப்பா சண்முகத்திடம் 'என்ன வேண்டும்' என்றார்.



'சாப்பாடு வேண்டும்' என்றான். இலை வந்தது. அனைத்து வகைகளும் வந்தன. சண்முகத்தின் நீண்டநாள் ஆசை நிறைவேறியது. ஒரு பாதி சாப்பாட்டிற்கு மேல் அவனால் சாப்பிட முடியவில்லை. 'அப்பா போதும்' என்றான்.

"உணவை வீணடிக்கக்கூடாது" என்று சண்முகத்தின் அப்பா கூறினார்.

சண்முகத்தால் சாப்பிட முடியவில்லை. ஆதலால் மீதமுள்ள சாப்பாட்டை இலையோடு குப்பைத் தொட்டியில் போட்டான். சண்முகம் ஹோட்டலை விட்டு அப்பாவுடன் வெளியே வந்தபோது சண்முகம் கண்ட காட்சி அவன் மனதை நெருடியது.

கிழிந்த சட்டையோடும் கிழிந்த கால்சட்டையோடும் ஒரு சிறுவன் எச்சில் இலையில் ஒட்டிக்கொண்டிருந்த சோற்றுப் பருக்கைகளைத் தேடித்தேடி எடுத்துத் தின்றான்.

சண்முகத்தின் மனதில் சிந்தனை ஓடியது.

"அவ்வளவு சாப்பாட்டைச் சாப்பிடாமல் நான் வீணடித்துவிட்டேனே" என்று அப்பாவிடம் கூறினான்.

அப்பா அவனைத் தேற்றினார்.

"உணவில்லாமல் நாட்டில் பலபேர் வாழ்கின்றனர். நாம் ஒவ்வொருவரும் உணவை வீணடிக்காமல் தேவைக்கு உண்டால் பிறருக்கு உணவு தானாகச் சென்றடையும். வறுமை ஒழியும்" எனச் சண்முகத்திடம் அப்பா கூறினார்.

'என்னை மன்னித்துவிடுங்கள் அப்பா' என்றான் சண்முகம் தழுதழுத்த குரலில்.

"அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது உணவு. உடையில்லாமல் வாழ்பவன் கூட உண்டு. உறைவிடம் இல்லாமல் வாழ்பவர்கள் பலருண்டு. உணவில்லாமல் வாழ்வது என்பது முடியாது. எனவேதான் உணவு, உடை, உறைவிடம் என மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உணவு முதலிடம் பெறுகின்றது. தேவைக்கு ஏற்ப உண்ணுவோம்; உணவை வீணடிக்காமல் வாழ்வோம்; உணவுக் கிடைக்காதவர்க்கு உதவுவோம்; வறுமையை ஒழிப்போம்" என்றார் அப்பா.

– கி.அன்புமொழி

**ஆசிரியர் குறிப்பு** இவர் நாகை மாவட்டம் செம்பனார் கோயில் கலைமகள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். 'இனிது' இணைய இதழில் சமூக விழிப்புணர்வையும் நல்லறிவுரைகளையும் வழங்குகின்ற கவிதைகளையும் கதைகளையும் தொடர்ந்து எழுதி வருகிறார். நல்லாசிரியர் விருது, ஆசிரியப் பேரொளி விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- கதையை உரையாடல் வடிவில் எழுதுங்கள்.
- உணவை வீணாக்குவதைத் தவிர்க்க உதவும் வகையில் முத்திரை வாக்கியங்கள் தயாரியுங்கள்.
- "உணவை வீணாக்காதே!" எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவதற்கான சொற்பொழிவுக் குறிப்பு தயாரியுங்கள்.
- இயற்கை உணவுகள் மற்றும் செயற்கை உணவுகளின் பட்டியல் தயாரித்து வகுப்பறையில் வெளியிடுங்கள்.
- உணவுத் தட்டுப்பாடு பற்றிய பத்திரிகைச் செய்திகளைச் சேகரித்துத் தொகுப்பு உருவாக்குங்கள்.
- உணவுப் பொருட்கள் வீணாவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து எழுதுங்கள்.

அலகு 6

# ஆடுவோமே பள்ளு பாடுவோமே



நாடு, இனம், மொழியால் வேறுபட்ட மக்களை விழாக்கள், விளையாட்டுகள் போன்றவை ஒன்றிணைக்கின்றன. ஒன்றிணைந்து செயல்படுவதே நாட்டு முன்னேற்றத்தின் அடிப்படையாகும். நாட்டு முன்னேற்றத்திற்காகத் தங்கள் உயிரையும் உடைமைகளையும் தியாகம் செய்து, நாட்டு நலனையே தங்கள் நலனாகக் கருதிய தேசத்தலைவர்களின் தியாகங்களை நாளும் போற்றுவோம்.

# தியாகிகள் தினம்



## தியாகிகள் தினம்

இந்திய விடுதலைக்காக இன்னுயிரை ஈந்த விடுதலைப் போராட்ட வீரத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் மறைந்த ஜனவரி 30–ஆம் தேதி ஆண்டுதோறும் தியாகிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

தேச விடுதலைக்காக உயிர் நீத்த லட்சக்கணக்கான வீரத்தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துவதோடு, அவர்களின் வீரச்செயல்களை நினைவு கூர்ந்து, விடுதலை வரலாற்றை இளம் நெஞ்சங்களில் விதைக்க வேண்டிய உன்னத தினம் தியாகிகள் தினம்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், மகாகவி பாரதி, பாலகங்காதர திலகர், தீரர் சத்தியமூர்த்தி, சுப்பிரமணிய சிவா, கோபால கிருஷ்ண கோகலே, பகத் சிங், அன்னிபெசன்ட் அம்மையார், தாதாபாய் நௌரோஜி, வல்லபாய் பட்டேல், மௌலானா அபுல்கலாம் ஆசாத், விபின் சந்திர பாலர், இரவீந்திரநாத் தாகூர், கவிக்குயில் சரோஜினி நாயுடு, வ.வே.சு.ஐயர், டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார், கர்மவீரர் காமராஜர் போன்ற எண்ணற்ற தலைவர்களின் தியாகத்தால் விளைந்தது இந்திய விடுதலை.

விடுதலைப் போருக்கு ஆயுதம் எடுக்காமல் அகிம்சை என்னும் தியாகத் தத்துவத்தோடு புறப்பட்ட ஒரே நாடு இந்தியா. நல்ல நோக்கத்திற்காக,

கைம்மாறு கருதாமல் செய்யும் அர்ப்பணிப்பே தியாகம். வாழ்வின் எல்லா தியாகங்களையும் விட நாட்டு விடுதலைக்காக மக்கள் செய்த தியாகமே உயர்ந்தது; உன்னதமானது.

'பெற்ற தாயும் பிறந்த நாடும் ஒன்று' என்பதால் இரண்டையும் பாதுகாக்கத் தியாகம் புரிவது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகிப் போனது. 'உடல், பொருள், உயிர்' என்று நாட்டு விடுதலைக்காகத் தியாகம் செய்த ஒவ்வொரு தியாகிகளும் வீர வணக்கத்திற்குரியவர்கள்.

நியாயத்திற்காகப் போராடிய காந்தியடிகளை அநியாயமாக முதுகில் உதைத்துச் சிறையிலடைத்தான் ஆங்கிலேயன். சிறையில் அவருக்குக் கொடுக்கப்பட்டது செருப்பு தைக்கும் வேலை. விடுதலை பெற்று வெளியே வந்தபோது, தன்னை உதைத்துச் சிறையிலடைத்த ஆங்கிலேயனுக்கு இரண்டு காலணிகளைப் பரிசளித்தார் காந்தியடிகள்.

'என் காலுக்கு அளவெடுக்காமல் இவ்வளவு சரியாக உங்களால் எப்படிக் காலணி செய்ய முடிந்தது? என்று கேட்டான் ஆங்கிலேயன். எனது முதுகில் உதைத்து என்னைச் சிறையிலடைத்தபோது உங்கள் கால்தடம் என் சட்டையில் பதிந்திருந்தது. அதையே அளவாக எடுத்து உங்களுக்குக் காலணி தயாரித்தேன்' என்று காந்தியடிகள் சொன்னபோது வெட்கித் தலைகுனிந்தான் ஆங்கிலேயன்.

நம்மை அடிப்பவனை அதேபோல் திருப்பி அடிக்கச் சொன்னது சீனத் தத்துவஞானி கன்பூசியசின் தத்துவம். நம்மை அடிப்பவனை மன்னித்து அவனுக்கும் உதவச் சொன்னது காந்தியடிகளின் தத்துவம்.

ஆங்கிலேயப்படை குதிரை மீது வந்து, தடியால் அடித்தபோது அடித்தவனின் முகத்தைப் பார்க்கக் கூடாதென்று கண்களை மூடிக்கொண்டார் ஜவஹர்லால் நேரு. 'அடித்தவனைப் பார்க்காமல் ஏன் கண்களை மூடினீர்கள்? என்று கேட்டபோது, 'இந்தியா விடுதலை பெற்ற பின் நாமும் பதவியில் அமர்வோம். அப்போது, நமது மனம், நம்மை அடித்தவனைப் பழி வாங்கிவிடக் கூடாதே என்று நினைத்து, அடித்தவனின் முகத்தைப் பார்க்க வேண்டாமெனக் கண்களை மூடிக் கொண்டேன்' என்று பதிலளித்தார் பண்டித நேரு. 'நம்மைத் துன்புறுத்தியவன் எதிரியாயினும் பழி வாங்கக்கூடாது' என்ற மனிதநேயம் பண்டித நேருவின் தியாகம்.

ஆண்டுதோறும் தியாகிகளுக்குத் திருநாள் எடுத்து, நாட்டுப்பற்றை ஒவ்வொருவர் நெஞ்சிலும் விதைப்போம். இந்திய விடுதலைத் தியாகிகளின் கண்ணீரும் செந்நீரும் மண்ணோடு கலந்தன. இறுதி மூச்சு விண்ணோடு கலந்தது. ஆனால் அவர்கள் செய்த தியாகங்களோ இன்றும் மக்களைச் சுதந்திரமாக வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன.

– டாக்டர் பி.கே.மனோகரன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் பாரதியார் பல்கலைக் கழகத்தில் பதிவாளராகவும் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் தொலைநிலைக் கல்வி இயக்குநராகவும் பணியாற்றியவர். பதினைந்து நூல்களை எழுதியுள்ளார். வாழ்நாள் சாதனையாளர் விருது, பாரதியார் பல்கலைக்கழக விருது, சிறந்த திட்ட அலுவலர் விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து நேருவின் மனிதநேயச் செயலைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - பரிசளித்தார்
  - கைம்மாறு
  - அகிம்சை
  - தலைகுனிந்தான்
- சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளைத் தயார் செய்து மலராக வெளியிடுங்கள்.
- உங்கள் பள்ளியில் நடைபெறும் தியாகிகள் தினம் தொடர்பான நிகழ்விற்குச் சுவரொட்டி தயாரியுங்கள்.

## சுதந்திரத் திருநாள்

வெற்றி முரசு கொட்டிடுவோம் !
வீர வணக்கம் செய்திடுவோம் !
எட்டுத் திசையும் கூடிடுவோம் !
இந்தியத் தாயைப் போற்றிடுவோம் !

கட்டபொம்மன், ஜான்ஸி ராணி
காந்தித் தாத்தா, நேதாஜி
பட்டேல், நேரு, சிதம்பரனார்
படங்கள் வைத்து வணங்கிடுவோம் !



பீரங்கிக் குண்டுக் கஞ்சாமல்
பெரிதாய் உயிரை எண்ணாமல்
தீரங் கொண்டு போரிட்ட
தியாகி களைநாம் வாழ்த்திடுவோம் !

பிச்சைக் காரர் இல்லாமல்
பிறரின் பொருளைத் திருடாமல்
கட்சிச் சண்டை காணாமல்
களித்து வாழ எண்ணிடுவோம் !

உலகில் அமைதி தோன்றிடவும்
உண்மை அன்பு பரவிடவும்
கலகக் காரர் திருந்திடவும்
கடவுள் அருளை வேண்டிடுவோம்!

– கலைமாமணி திருச்சி பாரதன்

**ஆசிரியர் குறிப்பு** இவரது இயற்பெயர் ர. தங்கவேலன். கோ. ரங்கசாமி, காமாட்சி தம்பதியருக்கு 30.09.1934–இல் மகனாகப் பிறந்தார். கவிஞர், எழுத்தாளர், நாடக ஆசிரியர் எனப் பன்முகத் தளங்களில் பயணித்தவர். சிறார்களுக்கான பல படைப்புகளை வெளியிட்டுள்ளார். இவர் கலைமாமணி, கவிஞர் திலகம், தெய்வீகக் கவிமணி, கவித்தென்றல் உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடலைக் குழுவாக மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலில் வரும் சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் பெயர்களைக் கண்டுபிடித்து அகரவரிசைப்படுத்துங்கள்.
- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- பாடலில் கவிஞர் கூறும் அறிவுரைகள் யாவை? எழுதுங்கள்.

## சிறுவர்க்குச் சுதந்திரம்

கோமதிக்கு ஒருபுறம் குதூகலம்; மறுபுறம் ஒரே பரபரப்பு. அன்று சுதந்திரநாள். பள்ளியில் தேசியக் கொடியேற்று விழா நடைபெறவிருந்தது. சற்று முன்னதாகவே செல்ல விரும்பினாள். விழாவுக்குப் புறப்பட்டாள். அவள் தம்பி ரகுவும் புறப்படத் தயாரானான். ஆனால் மற்றொரு தம்பி மணி இன்னும் தயாரானதாகத் தெரியவில்லை.அவனையும் அங்கே காணோம்.

கோமதி வீடெங்கும் மணியைத் தேடினாள். எங்கும் காணோம். வீட்டின் பின்கட்டுக்குச் சென்றாள். அங்கே அவன் இருந்தான். சாவதானமாக விளையாடிக் கொண்டிருந்தான். கொடியேற்று விழாவுக்குப் புறப்படுபவன்போல் தோன்றவில்லை.

மணியை நெருங்கினாள் கோமதி."என்னடா, மணி! இன்னும் நீ புறப்படவில்லையா? இன்றைக்குச் சுதந்திர தினம் என்பதுகூட மறந்துவிட்டதா?"

கோமதி கூறியது எதையும் கேட்க விரும்பாதவன் போல் விளையாடிக் கொண்டிருந்தான் மணி.

இதற்குள் அங்கு வந்தான் ரகு.

"என்னடா, மணி! பள்ளிக்கு இன்னும் புறப்படலையா? ஏழு மணிக்கே மாணவர்கள் எல்லோரும் பள்ளி வரணும்'னு தலைமையாசிரியர் சொல்லியிருக்காரே. என்னிக்கும்போல இன்னிக்கும் நீ 'தாமதத் திலகம்' தானா?" என்று கூறிச் சிரித்தான் ரகு.

ரகு சிரித்தது மணிக்குப் பிடிக்கவில்லை. எரிச்சலாக இருந்தது. கோமதி மீண்டும் கேட்டாள்.

"எப்பவுமே வகுப்புக்குப் பிந்தியே வருவே. இன்னிக்குச் சுதந்திர தின விழா. இதற்காவது கொஞ்சம் முந்திப் போகக் கூடாதா?"

கோமதியை நோக்கி நிமிர்ந்து பார்த்தான். தன் குரலைச் சற்று உயர்த்தி சுதந்திர தின விழாவுக்கு வரப் போவதில்லை என்ற முடிவை உறுதியாகக் கூறினான் மணி.

இவன் கூறிய பதில் ரகுவுக்கு வியப்பாக இருந்தது. காரணம் தெரிந்து கொள்ள விரும்பினான்.

"என்னடா, மணி! ஏன் இந்தச் சத்தியாக்கிரகம்?"

"இன்னிக்குச் சுதந்திர தினம் தானே?" என்று அலட்சியமாகக் கேட்டான், மணி.



"அதில் என்னடா உனக்குச் சந்தேகம்? இன்று 'சுதந்திர தினம்' தான்." என்று வேகமாகப் பதில் கூறினாள் கோமதி.

"அவங்கவங்க சுதந்திரமா இருப்பதுதானே சுதந்திரம் ! தினசரி தவறாம பள்ளிக்கூடம் போறோம். பள்ளிக்குப் போகும் வரைக்கும் வீட்டில் ஒரே கெடுபிடி. குளி! சாப்பிடுன்னு அம்மாவின் ஒரே அதட்டல். 'வீட்டுப் பாடத்தைப் படி, கணக்கைப் போடுன்னு அப்பாவின் மிரட்டல். ஒரு நிமிடம்கூட சும்மா இருக்கவிடாம உயிரை வாங்குறாங்க."

"பள்ளிக்கூடம் போனால் அங்கே ஆசிரியரின் கெடுபிடி. அதைப் படி, இதை எழுதுன்னு பிழிஞ்சு எடுக்கிறார். சுருக்கமா சொன்னால் வீட்டிலேயும் விடுதலை இல்லை; பள்ளிக்கூடத்திலும் சுதந்திரம் இல்லை. இரண்டு இடத்திலும் ஆட்டிப்படைக்கிறாங்க" என்று தன் மனதில் உள்ளதையெல்லாம் கொட்டினான் மணி. சுதந்திரத்துக்கு அவன் கொண்டிருந்த பொருள் வேறாக இருந்தது.

"அப்போ, நீ இன்னிக்கு விழாவுக்கு வரப் போவதில்லையா, மணி?"

சற்று அதட்டலாகவே கேட்டாள் அக்காள் கோமதி.

இந்தச் சமயத்தில் அவர்கள் மாமா அங்கே வந்தார். வயதானவர். நன்கு படித்தவர். வேடிக்கையாகப் பேசுபவரும் கூட. அதனால் மணி உட்பட எல்லோருக்கும் அவரைப் பிடிக்கும். அவர் கோமதி, ரகு, மணி மூவரும் ஒன்றாக இருப்பதைப் பார்த்தார்.

"எல்லோரும் எங்கே புறப்பட்டுட்டிருக்கீங்க?"

"இன்னிக்கு எங்க பள்ளிக்கூடத்திலே சுதந்திர தின விழா. அதுக்காக நானும் ரகுவும் போய்க் கொண்டிருக்கோம். மணியைக் கூப்பிட்டா வரமாட்டேங்கிறான். அதுக்கு வேறே ஏதேதோ காரணங்கள் சொல்றான். நீங்களாவது சொல்லி விழாவுக்கு வரச் சொல்லுங்க, மாமா" எனக் கோமதி பதில் சொன்னாள்.

கோமதியைத் தொடர்ந்து ரகு பேசினான்.

"ஒரு சாக்லேட்டுக்காக நீங்க வேணும்னா விழாவுக்குப் போங்கன்னு கேலி பேசுறான், மாமா."

மணியின் மறுப்பு மாமாவுக்கும் விந்தையாக இருந்தது.

"ஏன்டா, மணி! சுதந்திர தின விழாவின் மதிப்பே ஒரு சாக்லேட் தான்னு நினைச்சுட்டியா?" என மாமா சிரித்துக்கொண்டே கேட்டார்.

"சுதந்திர தின விழாவிலே மிட்டாய் தானே மாமா தர்றாங்க. அதைத்தான் சொன்னேன்."

மணியின் பதில் மாமாவுக்கு வேடிக்கையாக இருந்தது.

"உண்மைதான், மணி. ஆனால் மிட்டாய் எப்போ கொடுக்கிறாங்க?"

"விழா முடியறப்போ, கொடுப்பாங்க!" என மணி உடனே பதில் சொன்னான்.

"அதுக்கு முன்னாலே என்ன என்ன நிகழ்ச்சிகள் நடக்கும்?" என மாமா கேட்டார்.

இதற்குப் பதில் சொல்ல கோமதி முந்திக் கொண்டாள்.

"முதலில் கொடி ஏற்றுவாங்க. அப்புறம் சுதந்திர தினவிழா நோக்கம் பற்றிப் பேசுவாங்க, அதன்பிறகு தேசியகீதம் பாடப்படும். கடைசியாக எல்லோருக்கும் இனிப்பு தருவாங்க."

கோமதியின் பதில் மாமாவுக்குத் திருப்தியாக இருந்தது.தொடர்ந்து அவர் கேள்வி கேட்டார்.

"சுதந்திர தினம், குடியரசு தினங்களில் கொடி ஏற்றி விழா கொண்டாடறோம். அப்போ, கொடி வணக்கம் செய்யிறோம். அவ்வணக்கம் ஏன் செய்யிறோம்னு தெரியுமா?"

ரகு பதில் சொல்ல முன்வந்தான்.

"நம் நாட்டு தேசியக் கொடியை ஏற்றி வணங்கினால் அது நம் நாட்டையே, பாரதத் தாயையே வணங்கியது போலாகும்."

"பாரதியார் 'கொடி வணக்கப் பாடல்' எழுதியிருக்கார். அதிலேகூட "தாயின் மணிக்கொடி பாரீர்!" என்றுதான் எழுதியிருக்கிறார் மாமா."

அப்படியானால், நம் நாட்டின் "மிக உயர்ந்த சின்னம் தேசியக் கொடிதானா மாமா?"

அதிலென்ன சந்தேகம் ரகு? நம் தேசியக் கொடி நம் நாட்டின் மிக உயர்ந்த சின்னம். அதற்கு நாம் எல்லோரும் சிறந்த மரியாதை காட்ட வேண்டும். அது நம் அனைவரின் இன்றியமையாக் கடமை. மேலும், நம் தேசியக் கொடி நம் மக்களின் ஒற்றுமை, தூய்மை, அகிம்சை ஆகியவற்றின் சின்னமாகத் திகழ்கிறது.



"தேசிய கீதமும் அப்படித்தானே, மாமா?"

"ஆமாம், கோமதி. தேசியக் கொடியை ஏற்றும்போது நாம் எழுந்து நின்று வணக்கம் செலுத்த வேண்டும். அதைப் போல தேசிய கீதம் இசைக்கப்படும்போதும் எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும். தேசிய கீதம் பாடுகிறவரோடு சேர்ந்து நாமும் பாட வேண்டும். இப்படிச் செய்ய வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும்."

"அப்படீன்னா, நம்ம மணிக்கு அந்தக் கடமையுணர்ச்சி இல்லை என்று சொல்றீங்களா மாமா?" எனக் குத்தலாகக் கேட்டான் ரகு. அதற்கு மாமா பதில் சொல்வதற்கு முன்பு கோமதி பேசினாள்.

"அவனுக்கு நாட்டுப் பற்றுமில்லை; கடமை உணர்ச்சியுமில்லை. இவை இரண்டும் அவனுக்கு இருந்திருந்தா சுதந்திர தின விழாவுக்கு வரமாட்டேன் என்று சொல்வானா? சுதந்திரமா ஊர் சுற்றி விளையாடப் போறேன்னு அடம் பிடிப்பானா?"

கோமதியின் பேச்சு மணியைச் சீண்டுவது போல் இருந்தது. அவன் கோமதியை வெறுப்போடு பார்த்தான். நிலைமையை ஓரளவு புரிந்து கொண்ட மாமா மேலும் விளக்க முயன்றார்.

'சுதந்திரம்னா' எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் தான்தோன்றித் தனமாக அலைவது என்று தவறாக நினைத்திருக்கிறான் மணி. இந்த நாளை நாம் ஏன் சுதந்திர தினம்னு சொல்றோம்?

மாமாவின் கேள்விக்கு ரகு பதில் கூற முற்பட்டான்.

"நம் நாட்டை வெள்ளையர் அடிமைப்படுத்தி ஆண்டாங்க. அவர்களிடமிருந்து விடுதலை பெற நீண்ட நாள் போராடி, சுதந்திரம் வாங்கினோம். நம்மை நாமே ஆள உரிமை பெற்ற அந்த நாளைத்தான் ஆண்டுதோறும் கொடியேற்றிக் கொண்டாடுகிறோம்" என விடுதலை வரலாற்றைச் சுருக்கமாகக் கூறி முடித்தான் ரகு.

சரியாகச் சொன்னாய் ரகு. பெற்ற இந்த உரிமையைப் பேணிக் காக்கணும். இதற்காக அவரவர் கடமையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தக் கடமைகளைத் தவறாமல் செய்ய வேண்டும். அப்போதுதான் நம் சுதந்திரம் நிலைக்கும்.

"இப்போ, மணியை எடுத்துக் கொள்வோம். அவன் தன் கடமைகளை மறந்து விட்டான். வீட்டிலும் பள்ளியிலும் உள்ள கட்டுப்பாடுகளை வெறுக்கிறான். தனக்குள்ள சுதந்திரத்தைத் தவறான வழியிலே ஊர் சுற்றி விளையாடப் பயன்படுத்த விரும்புகிறான். இதற்காக அவன் வீட்டிலும் பள்ளியிலும் கண்டிக்கப்படுவான். ஏன், தண்டிக்கப்படவும் செய்யலாம் இல்லையா?"

மாமா இவ்வாறு கூறியபோது மணி தன் தவறை உணர்ந்தவன்போல் காணப்பட்டான்.

"மன்னிக்கணும் மாமா. 'சுதந்திரம்னா' விருப்பப்படி நடக்கிறதுன்னு

தப்பா நெனச்சுட்டேன். அதனாலே கடமை தவறி நடக்கப் போனேன். கடமையும் கட்டுப்பாடும்தான் நம் சுதந்திரத்தைக் காக்கும் கேடயங்கள். அதை இப்போ நன்றாக உணர்ந்துட்டேன். இனி ஒரு போதும் கடமை தவறி நடக்கமாட்டேன். இது உறுதி" என மணி மன உறுதியோடு கூறிய வார்த்தைகள் மாமாவுக்கு மகிழ்ச்சியளித்தன. கோமதியும் ரகுவும் பூரிப்படைந்தனர்.

– கலைமாமணி மணவை முஸ்தபா

**ஆசிரியர் குறிப்பு** இவர் திண்டுக்கல் மாவட்டம் பிலாத்து என்ற ஊரில் ஜூன் 15, 1935–இல் பிறந்தார். எழுத்தாளராகவும் இதழாளராகவும் அறிவியல் தமிழ் ஆய்வாளராகவும் சர்வதேச இதழான 'யுனெஸ்கோ கூரியர்' தமிழ் மாத இதழின் ஆசிரியராகவும் விளங்கியவர். இவர் அறிவியல் தமிழ்த் தந்தை என்றும் அறியப்படுகிறார். தமிழக அரசின் 'கலைமாமணி' உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார். அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம், கணினியியல் உள்ளிட்ட பல துறை சார்ந்த அகராதிகளையும் கலைக்களஞ்சியங்களையும் உருவாக்கியுள்ளார். இவர் பிப்ரவரி 06, 2017 அன்று காலமானார்.

## செயல்பாடுகள்

- சுதந்திரமாய் இருப்பதற்கு மணி கூறும் காரணங்களை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? விளக்கி எழுதுங்கள்.
- கோமதி, ரகு, மணி மூவரும் பேசுவதை உரையாடல் வடிவில் மாற்றி எழுதுங்கள்.
- மூவர்ணக் கொடியின் நிறங்கள் எவற்றையெல்லாம் சுட்டிக்காட்டுகின்றன என்பதைக் கலந்துரையாடி எழுதுங்கள்.
- உங்கள் பள்ளியில் கொண்டாடும் சுதந்திர தின விழாவுக்கு ஒரு நிகழ்ச்சி நிரல் தயாரியுங்கள்.
- சுதந்திர தின விழாவில் உரையாற்றுவதற்காக 'எனது நாடு' எனும் தலைப்பில் சொற்பொழிவுக் குறிப்பு தயாரியுங்கள்.
- உங்கள் பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தினவிழா நிகழ்ச்சியைப் பத்திரிகையில் இடம்பெறச் செய்ய பத்திரிகைச் செய்தி தயாரியுங்கள்.
- அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
    - சாவதானம் –
    - அலட்சியம் –
    - அதட்டல் –
    - பூரிப்பு –

# ஒற்றுமையே உயர்வு




## ஒற்றுமையே உயர்வு

பள்ளி மைதானத்தில் கால்பந்து பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்கள் மாணவர்கள். விளையாட்டு ஆசிரியர் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார். வளவன் சிறப்பாகக் கால்பந்து விளையாடுவான். பள்ளியின் அணித்தலைவனும் அவன்தான். அதனால் அவனுக்குச் சிறப்புப் பயிற்சிகள் கொடுத்துக் கொண்டிருந்தார் விளையாட்டு ஆசிரியர்.

சிறிது நேரத்தில் பயிற்சி முடிந்து வியர்க்க விறுவிறுக்க பள்ளி மைதானத்தில் இருந்த மரத்தடியில் சென்று அமர்ந்தனர் மாணவர்கள்.

வளவன் அருகில் வசந்தன் வந்து அமர்ந்தான்.

"வளவா... நம்ம அணியில கபிலனுக்கு இடம் இருக்கா இல்லியா..."

"நிச்சயமா இடம் இல்லை... அதுதான் பார்த்தியே .. ஆசிரியர் பயிற்சி கொடுக்கறப்ப என்கிட்ட காட்டற அக்கறையை அவன்கிட்ட காட்டலையே" என்று சொல்லும்போதே அவன் கண்கள் மின்னியது.

"உண்மைதான்... ஆனா பயிற்சியில ஈடுபட்டிருந்தப்ப... உன்னய விட கபிலன்தான் சிறப்பா விளையாடினான்.'"

"பிறகு ஏன் ஆசிரியர் அவன்கிட்ட கவனம் செலுத்தலை?"

"எல்லாம் உன்னோட தலையீடாலதான்... விளையாட்டு ஆசிரியர் கால் பந்து அணியோட மொத்த உருவமா உன்னய மட்டும் பார்க்கிறார்.

உன்னாலதான் அணி வெற்றி அடையும்னு நம்பறார்... அதனாலதான் வேற யாரையும் சரியாக் கண்டுக்கறது இல்லை."

"சரியா சொன்ன வசந்தா... அணியோட மொத்தப் பொறுப்பும் என்கிட்டதான் இருக்கு... அதனாலதான் ஆசிரியர் என்மேல அதிக அக்கறை எடுத்துக்கறார்" என்று பெருமையாகச் சொன்னான் வளவன்.

"பிறகு ஏன் சென்ற முறை கால்பந்தாட்டப் போட்டியில நம்ம அணி ஜெயிக்கலை" என்று வசந்தன் இறுக்கிப்பிடி போட்டான்.

"அது... அது..." என்று திணறினான் வளவன்.

"நான் சொல்றேன் .... போன போட்டியில கபிலன் கலந்துக்கல... அதனாலதான் உன்னால ஒரு வெற்றிப் புள்ளி கூட எடுக்க முடியலை..." என்று வசந்தன் சொன்னான்.

வளவன் அமைதியானான்.

"இந்த முறையும் கபிலனுக்கு அணியில இடம் இல்லாமல் செய்யக்கூடாது... நம்ம அணியோட நன்மைக்குத்தான் சொல்றேன் ... உன்னோட தனிப்பட்ட வெற்றி இங்க முக்கியமில்லை... பள்ளி அணியோட வெற்றிதான் முக்கியம். அதுக்கு நம்ம அணியில உள்ள எல்லோரும் ஒற்றுமை மனத்துடன் விளையாடினா நிச்சயம் வெற்றி பெற முடியும்" என்றான் வசந்தன்.

வளவன் தலை அசைத்துக் கொண்டான்.

"உண்மைதான் வசந்தா... நிச்சயம் இந்த விளையாட்டுல கபிலனுக்கு முக்கியமான இடம் உண்டு... அது மட்டுமில்லாமல் மற்ற திறமையான மாணவர்களுக்கும் நன்கு பயிற்சி கொடுக்கும்படி விளையாட்டு ஆசிரியர்கிட்ட சொல்வேன்" என்றான்.

அதன்படியே நடந்தும் கொண்டான்.

அனைத்துப் பள்ளிகளுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் வெற்றிக் கனியைப் பறித்து வந்தார்கள்.

வளவன் இரண்டு கோல்களை அடித்தான். அவன் கோல் அடிக்கப் பெரிதும் உதவியாயிருந்தான் கபிலன். அணியின் ஒற்றுமைதான் அவர்கள் வெற்றி பெறவும் உயர்வு பெறவும் காரணமாக அமைந்தது.

வெற்றி பெற்று வந்த மாணவர்களைப் பள்ளியே தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியது.

– தொகுப்பாசிரியர் சிவபாரதி

**ஆசிரியர் குறிப்பு** இவர் ஆத்திச்சூடி கதைகள் என்ற நூலை எழுதியுள்ளார். இப்பகுதி பெரியண்ணன் ஆத்திச்சூடி கதைகள் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- உங்களுக்குத் தெரிந்த விளையாட்டுகளின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.
- பள்ளியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் அதிகமான புள்ளிகள் பெற்று வெற்றி அடைந்த மாணவனைப் பாராட்டி ஒரு பாராட்டுக் கடிதம் தயார் செய்யுங்கள்.
- உனக்குப் பிடித்த ஏதேனும் ஒரு நாட்டுப்புற விளையாட்டைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- இந்திய ஹாக்கி வீரரான மன்பிரீத் சிங்கைப் பேட்டி காண்பதற்கான வினா நிரலைத் தயாரியுங்கள்.

## விளையாடு

விளையாடு விளையாடு நீ ஆடு
வீணான சிந்தனையை விட்டு ஒடு
விளைகின்ற பயிர்தானே பயன் நல்கும்
விளையாட்டுப் பருவம்தான் உனை உயர்த்தும்!

மலை தாண்டி நிற்கின்ற உன் ஆற்றல்
மங்காத திறன் படைக்கும் தனி ஆற்றல்
குழுவோடு விளையாடு குரல் எழுப்பு
கூடி நின்று வெற்றியைப் பறைசாற்று!

சல்லிக் கட்டு காளையென நீ எழும்பு
சங்கு முழங்கட்டும் வெற்றித் தூள் கிளப்பு
தங்கமே பரிசாகப் பரிசம் போடும்
தளராத உன் உறுதியை வெற்றிப் பாடும்!

விளையாட்டில் உன் வெற்றியின் தரம்
நாளை வேலைவாய்ப்புக்கு அதுவே வரம்
வரமாகும் விளையாட்டை விளையாடு
வரலாற்றை அதில் படைத்துக் களம் நாடு!

– முனைவர் இதயகீதம் அ. இராமானுஜம்

**ஆசிரியர் குறிப்பு** இவர் சேலம் மாவட்டத்தில் உள்ள கோனூர் கிராமத்தில் பிறந்தார். கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர் என்ற பன்முகத் திறமை கொண்டவர். தமிழக அரசின் தமிழ்ச்செம்மல் விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார். இதயராகம் உதயமாகட்டும், பூமித்தாய்க்கு ஆசை, அறிமுக அலைகள், வைர வரிகள் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடலை இராக தாளத்துடன் மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலில் உனக்குப் பிடித்த வரிகளை எழுதி அதற்கான காரணத்தையும் எழுதுங்கள்.

- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
  - ஆடு, ஓடு, ................, ................,
  - ................, ................, ................, ................,
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகர வரிசைப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ◆ சிந்தனை | ◆ குழு | ◆ ஓடு | ◆ காற்று |
| ◆ பயிர் | ◆ படைப்பு | ◆ ஆற்றல் | ◆ இழப்பு |
| ◆ பருவம் | ◆ ஆடு | ◆ எழுப்பு | ◆ வரம் |

- விளையாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.

## விளையாட்டு விழாக்களும் தேசிய ஒருமைப்பாடும்

விளையாட்டுகள் உடலை உறுதி செய்வதோடு ஒற்றுமைக்கு அடிகோலுவனவாகவும் விளங்குகின்றன. நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்க்கும் விளையாட்டு விழாக்கள் உலகெங்கும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.

ஓடி விளையாடவும் கூடி விளையாடவும் பயன்படும் விழாக்கள் முதலில் பள்ளி விளையாட்டு விழாவிலிருந்து தொடங்குகிறது. பின்பு அது மாவட்ட விளையாட்டு விழா, கல்லூரிகள் விளையாட்டு விழா, பல்கலைக்கழக விளையாட்டு விழா, தேசிய விளையாட்டு விழா, ஆசிய விளையாட்டு விழா, ஒலிம்பிக் விளையாட்டு விழா என்று பெருவளர்ச்சி அடைந்துள்ளன.

விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தல், கீழ்ப்படிதல், ஆர்வமும் ஊக்கமும் கொள்ளுதல், கூட்டு முயற்சி, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை போன்ற உயர்ந்த பண்புகளை மக்கள் இதயத்தில் குடிக்கொள்ளச் செய்வது விளையாட்டு விழாக்கள் ஆகும். இவைகளோடு உடலினை உறுதி செய்வதும் இவ்விழாக்களின் குறிக்கோள் ஆகும்.

- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
- அடக்கமாக அடங்கிக் கிடப்பவர்களுக்கு ஒற்றுமையே சிறந்த வலிமை.
- பலம் இல்லாதவையும் ஒன்றுசேர்ந்தால் பலம் உண்டாகி விடும்.
- ஒத்த மனமுடையவர் ஒன்றுசேர்ந்தால், கடலையும் வற்ற வைக்கலாம்.
- கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
- ஒரு கை ஓசை தராது.
- தனி மரம் தோப்பாகாது.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் நடக்கும் விளையாட்டு விழாக்களால் மாணவர்களிடையே நட்புறவு வளர்கிறது. அன்பும் பண்பும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் தழைக்கின்றன. இதுபோலவே தேசிய, ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவோர்களிடம் மாவட்டம், மாநிலம், நாடு என்ற மனப்பண்புகள் மாண்டு "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற நல்லெண்ணம் வளர வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

காவல்துறை, வங்கித்துறை, போக்குவரத்துத்துறை போன்ற பல்வேறு அமைப்பினரிடையே நடக்கும் விழாக்கள்

நட்புறவுக்குப் பாலமாக அமைகின்றன. நாடளவில் நடைபெறும் மேசைப் பந்து, சதுரங்கம், சுண்டுப் பலகை போன்ற விளையாட்டுகளால் மாநிலம் விட்டு மாநிலம் சென்று, பலரோடும் பழகி அங்குள்ள கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அறிந்து நல்லனவற்றை மேற்கொள்ள நல்ல வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

விளையாட்டு விழாக்கள் உடல் உறுதி விழாக்களோ பொழுது போக்குக் கருவிகளோ மட்டும் அல்ல; இவ்விழாக்கள் தேசிய ஒருமைப்பாட்டை மக்கள் இதயத்தில் தேக்கி வைக்கும் நாற்றங்கால்களில் விளையும் பயிர்கள். உலக சமாதானம் என்னும் குறிக்கோளை எட்டுவதற்கு உறுதுணையாகவும் இவை நிற்கும் என்பது உறுதி. ஆகவே விளையாட்டுத் துறை நாடுதோறும் வலிமை பெற்றுப் பொலிவதாக!

– புலவர் தெ. தமிழ்க்குமரனார்

**ஆசிரியர் குறிப்பு** கட்டுரைக் கரும்பு என்னும் நூலிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்.
- விளையாட்டு விழாக்கள் நடத்துவதன் நோக்கங்களைக் குறித்து எழுதுங்கள்.
- மாநில, தேசிய, உலக அளவில் பல்வேறு விளையாட்டு விழாக்கள் நடைபெறுகிறதல்லவா? என்னென்ன பெயர்களில் அவை நிகழ்கின்றன என்பதைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

  எ.கா. ◆ சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டி
  ◆
  ◆
  ◆
  ◆
  ◆
- உங்களுக்குப் பிடித்த ஒரு விளையாட்டைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- நாட்டுப்புற விளையாட்டுகளைப் பட்டியலிடுங்கள்.

# பைந்தமிழ்ப் பாரதி



## பைந்தமிழ்ப் பாரதி

பைந்தமிழ்த் தேரினில் பாரதி வந்தான்
பகைக்குலம் நடுங்கிட படைக்கலம் கொண்டான்
தந்தையர் நாட்டினில் வந்தவர் ஆளும்
தாழ்வினை அகற்றிடும் தமிழ்ப்படை கண்டான்!

கனவெனும் மலர்களில் கவிதையாம் தேனும்
கருத்தெனும் சாற்றினில் கரும்பினக் கூத்தும்
மனமெனும் அரங்கினில் மணித்தமிழ்ப் பாட்டும்
மழையெனப் பாரதி வழங்கினான் அன்று!

இயற்கையின் அழகினை இலக்கியம் செய்தான்
இருட்டறை வாழ்க்கையில் விளக்கென நின்றான்
துயர்களைச் சாய்த்திடும் துணிவினைத் தந்தான்
தூய்மையின் வழியினில் துணையென வந்தான்!

பாட்டெனும் சோலையில் பைங்கனி காட்டிப்
பனிமலர்த் தென்றலில் பரிவினை நீட்டி
நாட்டிய மயில்களும் நாணிய காட்சி
நறுந்தமிழ் வல்லவன் நல்கிய மாட்சி!

விடுதலை யெனுமொரு வேள்வியில் தன்னை
விறகென வழங்கிய இணையிலா வீரன்
தடையெனும் மலையிலும் தமிழ்க்கொடி ஏற்ற
தலையினை விலையெனத் தந்தவன் வாழ்க!

பாரதி என்றொரு சாரதி கண்டோம்
பாவலர் வியப்புறும் பாடல்கள் தந்தான்
கூரிய வாளெனக் கொடுமைகள் சாய்த்தான்
குன்றினில் பறந்திடும் கொடியென நின்றான் !

– ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் சென்னை ஆலந்தூரில் 1942–இல் பிறந்தார். கவிஞர், எழுத்தாளர், நாடக ஆசிரியர், பதிப்பாளர் எனப் பன்முக திறமைபெற்றவர். சிறுவர்களுக்கான பல பாடல்களையும் கதைகளையும் நாடகங்களையும் எழுதியுள்ளார். தமிழக அரசின் சிறந்த நூல் பரிசு, கவிவேந்தர் விருது, குழந்தை இலக்கிய மாமணி விருது போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

**பாரதியின் சிறப்புப்பெயர்கள்**

புரட்சிக்கவி
மகாகவி
தேசியக்கவி
விடுதலைக்கவி
முண்டாசுக்கவி
புதுக்கவிதையின் முன்னோடி
பைந்தமிழ்த் தேர்ப்பாகன்
சிந்துக்குத் தந்தை
செந்தமிழ்த் தேனீ
நீடுதுயில் நீக்கப் பாடி
வந்த நிலா
பாட்டுக்கொரு புலவன் பாரதி

## செயல்பாடுகள்

- பாடலை இனிமையான மெட்டமைத்துப் பாடுங்கள்.
- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
  - கொண்டான் / கண்டான்
  - ................................ / ................................
  - ................................ / ................................
  - ................................ / ................................
- சேர்த்தெழுதுங்கள்.
  - வாள் + என =
  - கனவு + எனும் =
  - பாட்டு + எனும் =
  - விளக்கு + என =
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - தூய்மை, துயர், தென்றல், வியப்புற்று
- அகர முதலி பார்த்துப் பொருள் கண்டறிந்து எழுதுங்கள்.
  - அகற்றிடும்
  - துயர்கள்
  - துணிவு
  - மாட்சி
  - பரிவு
  - நாணிய
  - சோலை
  - குன்று
- பைந்தமிழ்ப் பாரதி என்ற பாடலின் மையக்கருத்தை எழுதுங்கள்.

## டாக்டர் இராதாகிருஷ்ணன்



ஆசிரியராகத் தன் வாழ்க்கையை ஆரம்பித்து நமது நாட்டின் மிகப்பெரிய பதவியான குடியரசுத் தலைவர் பொறுப்பை ஏற்றவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள். தத்துவ ஞானியாக, சிறந்த நிர்வாகியாக, நல்ல ஆசிரியராக இப்படிப் பன்முகத் திறமை கொண்ட அவரது வரலாற்றை அறிந்து கொள்வது அவசியம்.

1888–ஆம் ஆண்டு செப்டம்பர் 5–ஆம் நாள் தமிழகத்திலுள்ள திருத்தணியில் பிறந்தார். இவரது பெற்றோர் வீராசாமி ஐயர் – சீதையம்மாள் ஆவர். இவருடைய முதல் ஆசிரியர் இவரது தந்தைதான். இராதாகிருஷ்ணன் தனது தந்தையிடமிருந்து தமிழ், தெலுங்கு மற்றும் வடமொழிகளைக் கற்றுக் கொண்டார். கல்வியை மட்டுமல்லாமல் இந்தியப் பண்பாடு, ஒழுக்கம், கலாச்சாரம் ஆகியவற்றையும் தன் தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டார்.

கல்வியைப் பொறுத்தவரை டாக்டர் இராதாகிருஷ்ணன் மிகத் தெளிவான சிந்தனையைக் கொண்டிருந்தார். கல்வி என்பது எழுத்தறிவை மட்டுமே கொடுக்கக்கூடியதாக இருக்கக் கூடாது. அது மனிதனைச் சிந்திக்க வைப்பதாகவும் புரிந்துகொள்ள வைப்பதாகவும் பொறுமையை வளர்ப்பதாகவும் இருக்க வேண்டும் எனக் கருதினார். அவரது கல்வியையும் அதைப் போலவே கற்றார். தொடக்கக் கல்வியைத் திருத்தணியிலும் திருப்பதியிலும் சிறப்பாகக் கற்றார். தம் உயர்க் கல்வியை வேலூரிலும் சென்னையிலும் கற்றுத் தேர்ந்தார்.

சென்னை மாநிலக் கல்லூரி, ஆந்திரம், பனாரஸ், ஆக்ஸ்ஃபோர்டு ஆகிய பல்கலைக்கழகங்களில் தத்துவப் பேராசிரியராகவும் பல்கலைக்கழகக் குழுவின் தலைவராகவும் இருந்தார். மைசூர் பல்கலைக்கழகத்திலும் கொல்கத்தா பல்கலைக்கழகத்திலும் பணிபுரிந்தார். கல்வியின் நோக்கம் ஒரு மனிதனின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றை வளர்ச்சியடையச் செய்வதாகும் என்ற கருத்தை அவர் வலியுறுத்தி வந்தார்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் பொறுப்பிலிருந்த போது இந்தியாவிலுள்ள இருபத்தைந்து பல்கலைக்கழகங்களுக்குச் சென்று இரண்டாயிரத்து ஐந்நூறு பேரறிஞர்களோடு உரையாடியிருக்கிறார். இவர் பணியாற்றிய பல்கலைக்கழகங்கள் இவரால் பெரிதும் புகழடைந்தன. இவரது தெளிவான ஆங்கிலப் புலமை ஆங்கிலேயர்களையும் வியப்படையச் செய்தன.

உலகிலுள்ள பல பல்கலைக்கழகங்கள் இவருக்குப் பதினேழு முறை 'டாக்டர்' பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கின்றன. அந்த அளவிற்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் அளவில்லாத பேராற்றல் பெற்று விளங்கினார்.

இவர், ஆசிரியப் பணியைப் போலவே நாட்டுப் பணியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். அண்ணல் காந்தியடிகள், பண்டித ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ் போன்ற தலைவர்களுடன் இணைந்து நாட்டு விடுதலைக்காகப் போராடினார். சுதந்திர இந்தியாவில் இரண்டு முறை இந்தியக் குடியரசின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றார். 1962–இல் இவர் இந்தியக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியக் குடியரசுத் தலைவராகப் பதவி வகித்தாலும், டாக்டர் இராதாகிருஷ்ணன் தான் ஓர் ஆசிரியர் என்பதில்தான் பெருமை கொண்டிருந்தார். அவரது விருப்பப்படியே அவரது பிறந்தநாள் 'ஆசிரியர் தினமாக' கொண்டாடப்படுகிறது. அந்த நாளில் மத்திய அரசும் மாநில அரசுகளும் சிறந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து, தேசிய அளவிலும் மாநில அளவிலும் இவரது பெயரில் விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகின்றன.

இவரது தன்னிகரில்லாப் பணிக்குப் பாராட்டுத் தெரிவித்து, நம் இந்திய அரசு 'பாரத ரத்னா' விருது வழங்கிச் சிறப்பித்தது. உலகம் போற்றும் இந்த மேதை 1975 ஏப்ரல் 17–ஆம் நாள் இயற்கை எய்தினார். அவர் மறைந்தாலும் அவரது தியாகப் பணியும் பெருமையும் ஒரு நாளும் மறையாது.

– எஸ். சசிகலாதேவி

**ஆசிரியர் குறிப்பு** இவர் மாணவர்களுக்குப் பயன்தரும் பொதுக்கட்டுரைகள், கடிதங்கள் எனப் பல நூல்களை எழுதியுள்ளார். இப்பகுதி சுராவின் கட்டுரைகள், கடிதங்கள் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை அளியுங்கள்.
  - டாக்டர் இராதாகிருஷ்ணன் வகித்த பதவிகளை எழுதுங்கள்.
  - டாக்டர் இராதாகிருஷ்ணன் பெற்ற விருதுகளை எழுதுங்கள்.
  - டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்தநாளை நாம் எந்தத் தினமாகக் கொண்டாடுகிறோம்?
- கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் கோடிட்ட சொற்களுக்கு இணையான சொல்லைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
  - நல்ல <u>எண்ணம்</u> மனிதனை உயர்த்தும்.
  - ஒருவனைக் <u>கட்டாயப்படுத்திப்</u> பணியவைப்பது ஆகாது.

- எழிலன் நன்றாகப் படிப்பான்.
- என் ஆவலுக்கிணங்க என் அப்பா புத்தாடை வாங்கித் தந்தார்.

- 'தன்னிகரில்லாத் தலைவர்கள்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்ற சொற்பொழிவுக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- ஆசிரியர் தினத்தையொட்டி உங்கள் பள்ளியில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு அழைப்பு விடுக்கும் பொருட்டுத் துண்டுப்பிரசுரம் தயார் செய்யுங்கள்.

## கொடி காத்த குமரன்

### காட்சி–1



**நாடக மாந்தர்கள் : 1. குமரன். 2. குமரனின் அம்மா**

கும : சோத்துக்குப் போட்டுக்கிற உப்புக்குக்கூட வரியாம் அம்மா! என்ன கொடுமை பாத்தியா?

அம் : அதுக்கு நாம் என்னப்பா செய்யமுடியும்? அவன்தானய்யா இந்த இராச்சியத்த ஆளுறான்.

கும : அம்மா போதும்! அவன் யாரு, நம்ம ஆளுவதற்கு? இது நம்ம நாடும்மா, நம்ம நாடு.

அம் : ஏம்பா... நான் சொல்றேன்னு கோவிச்சுக்காத... வேகப்பட்டும் ஆத்திரப்பட்டும் என்னப்பா செய்ய முடியும்?

கும : அம்மா! உம் மவன் கோழை இல்லை. அவன் உடம்பில ஓடுறது சாக்கடை இல்ல. நான் துடிக்கிறேன். ஏன்? இந்தியா சுதந்திரம் அடையணும். அவனுக்குப் பயந்து, இவனுக்குப் பயந்து, கோழையாய் வாழ்வதைக் காட்டிலும் சாவதே மேல் அம்மா, சாவதே மேல்!

அம் : அப்பா குமரா! எனக்குன்னு இருக்கிறது நீ ஒரே பிள்ளையப்பா. நீ இப்படியெல்லாம் பேசாத அப்பா. நீ போயிட்டா எங்களுக்கு யாரு அப்பா துணை?

குமு : இல்லை அம்மா. கடலிலிருந்து எடுக்கற உப்புக்கு வரியா? இத எதிர்த்து நடக்கிற போராட்டத்திலே நானும் கலந்துக்கத் தான் போறேன்.

அம் : (அழுதுகொண்டே) குமரா! உங்க அப்பா உடம்பு சரியில்லாம ஆறு மாசமா படுத்த படுக்கையா இருக்காரு. நீ சம்பாதிச்சாத்தான் அடுத்த வேளைக்குச் சோறு. இந்த நிலையிலே உனக்குப் போராட்டமெல்லாம் வேண்டாம்பா.

குமு : இல்லம்மா... பெத்த தாயைக் காட்டிலும் பிறந்த பொன்னாடுதான் பெரிசு. உன்னைப் போல இந்த நாட்டில இருக்கிற ஒவ்வொரு தாயும் தடுத்துட்டா நாம என்னைக்குமே அடிமைதானம்மா. நகருங்க அம்மா! நான் போராட்டத்துக்குப் போறேன்...

(தாய் தடுக்க, குமரன் போகாது திகைத்து நிற்றல்.)

### காட்சி – 2

**நாடக மாந்தர்கள் : 1. குமரன். 2. முதலாளி, 3. கணக்குப் பிள்ளை**

முத : என்ன குமரா ஒரு மாதிரியா இருக்கே? கடை வேலையே கவனிக்க மாட்டேங்கிற?

குமு : எப்படி முதலாளி கவனிக்க முடியும்? காந்தியடிகளைக் கைது செஞ்சுட்டாங்களாம். இந்த வெள்ளக்காரப் பாவிகள்...

முத : குமரா..! உன்.. சுதந்திர உணர்ச்சி எனக்கு நல்லா தெரியுதுப்பா. இருந்தும் நாம வெள்ளக்காரன எதிர்த்து எப்படியப்பா வாழ முடியும்?

குமு : ஏன் முதலாளி வாழ முடியாது? இந்த வெள்ளக்காரன் இந்த நாட்டுல அடியெடுத்து வைக்கிறதற்கு முன்னால நாம வாழவில்லையா? ஒவ்வொரு உள்ளமும் ஒற்றுமையா, சுதந்திர உணர்ச்சியாலே பொங்கி எழுந்தா வெள்ளக்காரன் வெள்ளக் காக்காவாய்ப் பறந்திடுவான் முதலாளி.



முத : குமரா...! நீ பேசறது நல்லாதான் இருக்கு. நடைமுறையில யாரப்பா எதிர்க்கிறது?

குமு : ஏன் முதலாளி...? நா எதிர்க்கிறேன். இந்த நெஞ்சில இருக்கிற உறுதி,உத்வேகம்... இத யாராலும் தடுக்க முடியாது முதலாளி!

முத : சரி... சரி ... ஒங்கிட்ட நாட்டப் பத்திப் பேசி நா ஒண்ணும் செய்ய முடியாது. நீ வேலையை ஒழுங்கா கவனிப்பா. பிழைக்கிற வேலையைப் பாரு.

குமு : இல்ல முதலாளி. என்ன மன்னிச்சிடுங்க. என்னால இனி இந்த வேலையெல்லாம் செய்ய முடியாது. என் தலைவர், அண்ணல் மகாத்மா காந்தி விடுதலை ஆகணும். பின்பு இந்த நாடு விடுதலையாகணும். இதுதான் என் உயிர் மூச்சு. இதுதான் என் இலட்சியம். விடுதலை! விடுதலை! விடுதலை!

முத : குமரா! உன் தேசபக்தி, உன் உயிருக்கு எமனாயிடக் கூடாதப்பா. பெரியவங்கச் சொல்றோம். கேளுப்பா...

க. பிள்ளை : குமரா...! குமரா...! நாங்க சொல்றதக் கேளுப்பா. வேண்டாம்பா. உங்கக் குடும்பம் ரொம்ப ஏழைக் குடும்பம்பா ... நீ போகாதப்பா. அதுவும் இங்க ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் இருக்காம்பா... உன்ன அடிச்சே கொன்னுடுவாம்பா.

குமு : சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் ஆழம். என்னத் தடுக்காதீங்க ஐயா! என் உயிரு போறதப் பத்தி எனக்குக் கவலையில்ல. இந்த நாடு விடுதலை அடையணும்... நகருங்க ஐயா! (தள்ளிக் கொண்டு செல்லல்.)

பின் குரல் : காலச் சக்கரம் உருள்கின்றது! குமரனின் உள்ளத்தில் நாளுக்குநாள் படிப்படியாக வளர்ந்து வரும் சுதந்திர உணர்ச்சிப் பொங்கி எழுகின்றது! தந்தையை இழந்து, தனித்து நிற்கும் தாயையும் மீறி போராட்டக் களத்திற்குக் கிளம்பி வருகிறான்!பெற்ற உள்ளம் மட்டுமல்ல; மற்ற உள்ளங்களும் அவனைத் தடுக்கின்றன! கொழுந்து விட்டெரியும் உறுதியான சுதந்திரத் தீயின் முன் இந்தக் கட்டுப்பாடெல்லாம் என்ன செய்யும்?

### காட்சி–3

**நாடக மாந்தர்கள் : குமரனின் தாய் மற்றும் பெரியவர்கள்**

நிகழிடம் : சாலை

(தாய் அலறிக்கொண்டே ஓடிவரல். குமரன் திரும்பிப் பாராமல் நடத்தல்)

தாய் : அப்பா... குமரா...! நா சொல்லுறதக் கேளுடா .. போகாதடா... என்ன விட்டுப் போகாதடா..

பெ.1 : ஏம்பா... குமரா, உங்க அம்மா துடிக்கிறது கண்டும், இப்படிக் கதறக்கதற விட்டுட்டு, கல் நெஞ்சினனாய்ப் போறீயே... இது உனக்கே நல்லா இருக்காப்பா?

பெ. 2 : ஏம்பா... குமரா... உங்க அப்பாவப் பறிக் கொடுத்து இன்னும் ஆறு மாசம் கூட முடியலப்பா. உன்னையும் பறிகொடுக்கணுமா? நில்லுப்பா... திரும்பி வீட்டுக்குப் போப்பா.

பெ.3 : ஏம்பா... அநியாயமா உன் உயிர இழந்திடாதப்பா. போலீஸ்காரங்க உங்க உயிரெல்லாம் பறிப்பதற்கு எல்லா திட்டமும் போட்டு வைச்சிருக்காணுவோப்பா.

கும : (கோபத்தோடு) போகாதே! போகாதே! இதைச் சொல்லுவதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லை? நீங்களெல்லாம் இந்த நாட்டு மக்களா? உங்களுக்கெல்லாம் சுதந்திர உணர்ச்சியே கிடையாதா? அடிபணிந்தும் அடிமைப்பட்டும் வாழ்வதைத் தவிர நிமிர்ந்து வீறு கொண்டு வாழத் தெரியாதா? இப்படிப் பயந்து பயந்து நூறாண்டு வாழ்வதைக் காட்டிலும், வீரனாய் ஒரு நாள் வாழ்ந்தால்கூட போதுமே! சே!

(தாயின் பக்கம் திரும்பி)

என்னைப் பாசமில்லாத மூடனாய் எண்ணி விடாதே அம்மா...! உன்னைப் போலக் கோடானு கோடி தாய் உள்ளங்கள் அமைதியாக வாழ வேண்டுமம்மா. உன் மகன் இந்தச் சுதந்திர வேள்வியிலே தன்னை அர்ப்பணித்துக் கொண்டாலும் கலங்காதே அம்மா! என் பாரத அன்னையின் விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும்! சுதந்திரம் நம்முடைய பிறப்புரிமை! சுதந்திர மூச்சே உண்மையானது; அழியாதது; ஆனந்த மயமானது! அதை அடைவேன்! என் உயிரே போனாலும் அடைவேன்! தடுக்காதே அம்மா!

## காட்சி – 4

**நாடக மாந்தர்கள் : 1. குமரன், 2. போலீஸ்காரர்**

(குமரன் தலைமையில் தொண்டர்கள் ஊர்வலம் செல்லல். போலீஸ் நாலாப்புறமும் தடியைச் சுழற்றிக் கொண்டு ஓடிவரல்)



போ.கா : ஏ! எங்கேடா போறீங்க? என்னடா செய்யப் போறீங்க? ஏய்... உங்களத் தாண்டா. நில்லுங்கடா !

கும : வந்தே மாதரம்! மகாத்மா காந்தியை விடுதலை செய்! அந்நிய ஆதிக்கம் ஒழிக!

போ.கா : ஏய்... யாருடா ஒழியணும்? உங்களைத்தாண்டா ஒழிச்சுக் கட்டணும்! இனிக் கத்தினீங்க...

கும : என்ன செய்வே?

போ.கா : அடிச்சு நார் நாராய்க் கிழிச்சிடுவேன்! திமிரு பிடிச்சவனே! என்ன செய்வேன்னா கேக்குற...?

கும : உன்னால எத்தன பேர அடிக்க முடியும்? எத்தனை பேரு உடம்பக் கிழிக்க முடியும்? உன்.. இரத்த வெறி எத்தன பேரக் கொன்னா அடங்கும் ? அடி...ம்... அடி...

போ.கா : ஏய்... என்ன சொன்னே! எத்தன பேர அடிக்க முடியுமா? முதல்ல உன்னை அடிக்கறேன்! உன் உடம்பக் கிழிக்கறேன். இரத்தத்த ஓட வைக்கிறேன். சாவுடா... சாவு... (அடித்தல்)

கும : மகாத்மா காந்திக்கு ஜே! பாரத மாதாவுக்கு ஜே! வந்தே மாதரம்.. (எதிரொலிகள்) அண்ணல் காந்தியை... விடுதலை செய்! என் ஆருயிர் காந்தியை விடுதலை செய்! வந்தே மாதரம்...!

போ.கா : கோஷத்தை நிறுத்துடா... நீ கத்தியாடா இந்த நாடு விடுதலை ஆகப் போவுது? ஏய் பசங்களா... கையில இருக்கிற கொடியைக் கீழே போடுங்கடா...

கும : ஏய்... என்ன சொன்னே! கொடியக் கீழே போடுவதா? என் உடம்புல கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கிற வரைக்கும் அது நடக்காது! அடி... என் உயிர் போறவரைக்கும் அடி! ஆனா... இந்தக் கொடி கீழே விழாது...

போ.கா : விழாது? விழ வைக்கிறேன் பார்...

(குமரனை அடித்து நொறுக்குகிறான். கால்கள் உடைந்து கீழே விழுந்தும் முட்டிக் கால்களுடன் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே குமரன் கத்துகிறான்.)

போ.கா : ஏய்! விடுதலை வீரா! உன் கால உடைச்சுட்டேன்! இன்னுமா உனக்குப் புத்தி வரல? இந்த நொண்டிக் காலோடு, பிழைக்கணுன்னா கொடியக் கீழே போடு...! போடு கீழே கொடிய...

(குமரன் தன் இரும்புக் கரத்தால் கொடிக் கம்பத்தை இறுக்கி உறுதியாகப் பிடித்தல்.)

கும : டேய்! இந்தக் கொடி அண்ணல் மகாத்மா பிடித்த கொடி! இந்த நாட்டின் சுதந்திர மண்ணிலே பறக்கப் போகின்ற கொடி! உன்னைப் போன்ற கைக்கூலிகளையும் ஒழிக்கும் கொடி! ஒவ்வொரு இந்தியனும் ஆனந்தப் பேருவுவகையாலே ஆர்ப்பரிக்கும் கொடி! உலகமெல்லாம் பறக்கப் போகின்ற சுதந்திரக் கொடி! அடிமைத் தளையை அறுத்து, தியாகத்தின் திருவுருவாய்ப் பறக்க இருக்கும் கொடி! விடமாட்டேன்! விடமாட்டேன்! அடி... வந்தே மாதரம்!

(உணர்ச்சிப் பெருக்கில், குருதி கொட்டக் கொட்ட கத்திக் கொண்டே கீழே சாய்கிறான். சாய்ந்த பின்பும் அடிக்கிறார்கள். அப்போதும் கொடி கீழே விழவில்லை.)

பாட்டு

உரிமை நாம் பெறவே
உயிரைத் தான் கொடுத்தான்!
கொடுமைத் தளையறவே
கொடி காத்தான் புவி மீது!
திருப்பூர்க் குமரனம்மா...
தேசமே அவனம்மா!

– மா. அய்யாசாமி

**ஆசிரியர் குறிப்பு** இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தீஸ்வரன் கோவிலில் பிறந்தவர். இவர் சிறந்த சொற்பொழிவாளராகவும் பட்டிமன்றம் மற்றும் வழக்காடு மன்ற பேச்சாளராகவும் திகழ்கிறார்.

## செயல்பாடுகள்

- பள்ளி இலக்கிய மன்ற விழாவில் "கொடிகாத்த குமரன்" நாடகத்தை மேடையில் அரங்கேற்றுங்கள்.
- சுதந்திர தினவிழா நிகழ்விற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயார் செய்யுங்கள்.
- பிரித்து எழுதுங்கள்
    - போராட்டமெல்லாம்
    - கவலையில்லை
    - வேண்டுமம்மா
    - தளையறவே
    - திருவுருவாய்
    - பேருவுவகை
- நாட்டுப்பற்றைத் தூண்டும் முத்திரை வாக்கியங்களை எழுதுங்கள்.
- சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.
    - ஆங்கிலேயர் அதிக வரிவிதித்த பொருள் எது?
        - கயிறு
        - உப்பு
        - பஞ்சு
        - எண்ணெய்
    - பெற்ற தாயைக் காட்டிலும் பெரிது ............................... எனக் குமரன் கூறினார்.
        - பொன்னாடு
        - தந்தையர்
        - தனயன்
        - வேலை

## திருவிதாங்கூரின் ஜான்ஸி ராணி



இந்தியநாடு ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்டிருந்த காலம். அப்போது கேரளம் ஒரே மாநிலமாக இருக்கவில்லை. மலபார், கொச்சி, திருவிதாங்கூர் என மூன்று பகுதிகளாக இருந்தது. மூன்று பகுதிகளிலும் மன்னராட்சி நடைபெற்றது. ஆனாலும் மன்னர்கள் ஆங்கில அதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டே ஆட்சி நடத்தினர். மன்னராட்சி ஏகாதிபத்திய ஆட்சியாகவே இருந்தது. இதனால் மக்கள் பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாயினர்.

சுமார் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் அப்போது திருவிதாங்கூர் பகுதியை ஆட்சிபுரிந்தவர் திரு. சித்திரை திருநாள் மகாராஜா அவர்கள். நாட்டில் மன்னராட்சிக்குப் பதிலாக மக்களாட்சி மலரவேண்டும் என மக்கள் ஆசைப்பட்டனர். மன்னர் நாட்டின் மன்னராக இருக்கட்டும், ஆனால் ஆட்சிப் பொறுப்பு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருக்கவேண்டும். இதுவே மக்களாட்சியின் நோக்கமாக இருந்தது. அன்று காங்கிரஸ் கட்சி முக்கிய அரசியல் கட்சியாக விளங்கியது. நாட்டு

விடுதலைக்குப் போராடுவதே கட்சியின் நோக்கமாக இருந்தது. மக்களாட்சி என்னும் கோரிக்கையைக் காங்கிரஸ் கட்சி மன்னரிடம் எடுத்துரைத்தது. ஆனால் அரசு அதற்குச் செவி சாய்க்கவில்லை. மாறாகக் கட்சியின் செயல்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டது. எனவே வேறு வழியின்றி கட்சித்தலைவர்கள் போராடத் துணிந்தனர்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தலைவரின் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. அரசு அடக்குமுறையைப் பயன்படுத்தியது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் காயமடைந்தனர்; கைதுசெய்யப்பட்டனர். தலைவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். ஆனாலும் போராட்டத்தைக் கைவிடவில்லை. தொடர்ந்து போராட்டத்தின் தலைமைப் பொறுப்பு ஒரு பெண்மணிக்குக் கொடுக்கப்பட்டது. அவர் அதைத் தனக்குக் கிடைத்த பாக்கியமாகவே கருதி மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். அப்போது அவருக்கு வயது 29 தான் ஆகியிருந்தது. 1938–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23–ஆம் நாள் காலைநேரம் கதராடை உடுத்தி காந்தித்தொப்பி வைத்து அந்த வீரப் பெண்மணி முன்னே செல்கிறாள். விடுதலைக் கோஷங்களை எழுப்பிக்கொண்டு நூற்றுக்கணக்கான தொண்டர்கள் அவருக்குப் பின்னால் அணிவகுக்கின்றனர். எல்லோரும் திருவனந்தபுரம் தம்பானூர் ரயில்நிலைய மைதானத்தை நோக்கிச் செல்கின்றனர். சிறிது நேரத்திற்குள் அந்த மைதானம் விடுதலை வீரர்களின் ஒரு மகா சமுத்திரமாக மாறிவிடுகிறது.

மன்னரை நேரடியாகச் சந்தித்து மக்களாட்சிக் கோரிக்கையை வழங்கவேண்டும் என்பதுதான் திட்டம். அதற்காக வீரப் பெண்மணி தலைமை தாங்கிச் செல்ல, தொண்டர்களும் வீரநடைபோட்டுப் பின்தொடர்ந்தனர். ஊர்வலம் அமைதியாகவே சென்றது. அந்நேரம் அரசாங்கத்தின் காவல் படையினர் விரைந்துவந்து ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தினர். "எல்லோரும் உடனடியாகக் கலைந்து செல்லவெண்டும். இல்லையென்றால் துப்பாக்கியை எடுக்கவேண்டிவரும்" என்று கடுமையான குரலில் எச்சரித்தார் போலீஸ் அதிகாரி. அதைக் கேட்டதும் அந்தப் பெண்மணியின் முகம் கோப ஆவேசத்தால் சிவந்தது. அவர் கொதித்தெழுந்தார். அந்தக் காக்கிச்சட்டைக்காரரையும் அவரது படை வீரர்களையும் அவர்கள் கையிலிருந்த துப்பாக்கியையும் கண்டு கடுகளவும் அச்சம் கொள்ளவில்லை. "இந்த விடுதலைப் போராட்டப் படைக்குத் தலைமைதாங்கி வருபவள் நான். சுடுவதாக இருந்தால் முதலில் என்னைச் சுடுங்கள்! அதன்பின் உங்கள் துப்பாக்கி இவர்களை நோக்கித் திரும்பட்டும்" என்று உரத்த குரலில் பேசி, தலைநிமிர்ந்து நின்றார். போலீஸ் அதிகாரியும் அவரது படையினரும் திரும்பிச் சென்றனர். நடந்ததை மன்னரின் செவிகளுக்கு எட்டச் செய்தார் அதிகாரி. மன்னரும் கோரிக்கையை வாங்க ஒப்புக்கொண்டார்.

மக்களாட்சிக் கோரிக்கை மன்னரிடம் நேரடியாக வழங்கப்பட்டது. போராட்டத்தின் முதற்கட்டம் வெற்றி கண்டது.

மன உறுதியுடன், விடுதலை வேட்கையுடன் தொடர்ந்து போராடிய அந்த வீரப் பெண்மணியின் பெயர் அக்கம்மா செறியான் என்பதாகும். அவரது தேசப்பற்றும் விடுதலை வேட்கையும் வீர உணர்வும் நாடெங்கும் பரவியது. அந்தச் செய்தி மகாத்மா காந்தியடிகளின் கவனத்திற்கும் வந்தது. அவர் அவரை மனமாரப் பாராட்டினார். இவர் ஒரு சாதாரணப் பெண்மணி அல்ல, "திருவிதாங்கூரின் ஜான்ஸி ராணி" என்று புகழாரம் சூட்டினார்.

1909 பெப்ரவரி 15–ஆம் நாள் கோட்டயத்தில் காஞ்ஞிரப்பள்ளி என்ற இடத்தில் அக்கம்மா பிறந்தார். தந்தையின் பெயர் தொம்மன் செறியான். தாய் அன்னம்மா. அக்கம்மா வரலாற்றில் பி.ஏ. பட்டம் பெற்றவர். காஞ்ஞிரப்பள்ளி 'செயின்ட் மேரீஸ்' பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர். ஆனாலும் அவரது எண்ணமெல்லாம் விடுதலை உணர்வாகவே இருந்தது. நாட்டில் நடந்த விடுதலைப் போராட்டங்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். எனவே 1938–இல் தமது பணியை ராஜினாமா செய்துவிட்டுப் பொதுநலத் தொண்டில் இறங்கினார். பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறை சென்றார். 1952–இல் வி.வி. வர்க்கி என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். நாட்டுக்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த அந்த வீரமங்கை 1982 மே மாதம் 5–ஆம் நாள் உயிர் நீத்தார்.

– பத்திரிகைச் செய்தி

## செயல்பாடுகள்

- கீழ் வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.
  - திருவிதாங்கூரின் ஜான்சி ராணி என்றறியப்படுபவர் யார்?
  - 1938–இல் திருவிதாங்கூர் மன்னராக இருந்தவர் யார்?
  - அக்கம்மா செறியான் பிறந்த ஊர் எது?
  - அக்கம்மா செறியானைத் திருவிதாங்கூரின் ஜான்சி ராணி என்று அழைத்தவர் யார்?
  - அக்கம்மா செறியான் எந்த வருடம் இறந்தார்?
- அக்கம்மா செறியானைப் போல் சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்ற கேரளப் பெண்மணிகள் யாரேனும் ஒருவரைப் பற்றிக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

  எ.கா: (பி. யசோதா, லட்சுமி என். மேனன், சுசீலா)

## அகரமுதலி

| | | |
|---|---|---|
| அகற்றிடும் | – | நீக்கிடும் |
| அங்கம் | – | உடல், உறுப்பு |
| அடங்கி | – | ஒய்ந்து |
| அண்டசராசரம் | – | உலகமும் அதிலுள்ள அசையும் மற்றும் அசையாப் பொருட்களும் |
| அதட்டல் | – | கண்டித்தல் |
| அலட்சியம் | – | உதாசீனம் |
| அழுகல் | – | கெட்டுப்போன நிலை |
| ஆலை | – | தொழிற்சாலை |
| இடர் | – | இடையூறு, துன்பம் |
| இந்திரன் | – | மருத நிலத்து தெய்வம் |
| இளைப்பாறி | – | களைப்பு நீங்கி |
| உன்னும் | – | நினைக்கும் |
| ஊறுபட்டனர் | – | துன்பப்பட்டனர் |
| ஓங்காரம் | – | பலத்த ஓசை, பேரிரைச்சல் |
| கமலம் | – | தாமரை |
| கமலை | – | கிணற்றிலிருந்து மாடுகள் பூட்டி நீர் இறைக்கும் கருவி |
| கழனி | – | வயல் |
| களைகள் | – | பயனற்ற செடிகள் |
| கனல் | – | நெருப்பு |
| காய்ந்து | – | உலர்ந்து |
| கானல் | – | பொய்யான நீர் |
| குட்டம் | – | குளம் |
| குடியிருப்பு | – | ஒரே மாதிரியாகக் கட்டப்பட்ட வீடுகளின் தொகுப்பு |
| குதூகலம் | – | மகிழ்ச்சி |
| கும்பி | – | வயிறு, அடுப்பு |
| குலுக்குது | – | மேலும் கீழும் அசைப்பது |
| குழைகிறது | – | வருந்துகிறது |
| குன்று | – | மலை |
| கொடுமை | – | தாக்கம் |
| கொதிகலன் | – | நீராவி உண்டாக்கப் பயன்படுத்தும் கலன் |
| சாவதானம் | – | நிதானம்/ மெல்ல |
| சிந்தனை | – | எண்ணம் |
| சினம் | – | கோபம் |
| சுரும்பு | – | வண்டு |
| சூறையாடுதல் | – | கூட்டமாக வன்முறையில் ஈடுபட்டுப் பொருள்களை நாசமாக்குதல். |
| சோலை | – | மரங்கள் செறிந்து நிழல் தரும் இடம் |
| தத்தளித்தல் | – | ஆபத்தில் அகப்பட்டுத் திகைத்தல் |
| தந்தி | – | மின்சார கம்பி மூலம் அனுப்பும் செய்தி |
| தமக்கை | – | அக்கா |
| தவலை | – | அகன்ற வாயுடைய பாத்திரம் |
| தளிர்த்தல் | – | துளிர்த்தல் |
| திகிலுடன் | – | பயத்துடன் |
| திரளுதல் | – | கூடுதல் |
| தீரம் | – | வீரம் |

| | | |
|---|---|---|
| துணிவு | – | தைரியம் |
| துயர்கள் | – | துன்பங்கள் |
| துயருற்றார்கள் | – | வருந்தினார்கள் |
| துழனி | – | பறவைக்கூட்டத்தின் ஒலி |
| துறக்கம் | – | சுவர்க்கம் |
| தூய்மை | – | சுத்தம் |
| தேர்ச்சி | – | திறமை |
| நச்சு | – | விஷம், உடலுக்குக் கேடு விளைவிக்கும் வேதிப் பொருள் |
| நாணத்தோடு | – | வெட்கத்தோடு |
| நாணிய | – | வெட்கிய |
| நூற்பாலை | – | நூல் நூற்கும் தொழிற்சாலை |
| நேர்ச்சி | – | விபத்து |
| பகட்டு | – | பிரகாசமான |
| பதறின | – | கலங்கின |
| பரிதவித்தல் | – | வருந்துதல் |
| பரிவு | – | இரக்கம் |
| பார் | – | உலகம் |
| பாவித்தல் | – | எண்ணுதல் |
| பாழ்பட்டு | – | கேடுற்று |
| பிணைத்திருக்கும் | – | கட்டப்பட்டிருக்கும் |
| புகுந்தனர் | – | அடைந்தனர் |
| புதுக்கி | – | சீரமைத்து |
| புனல் | – | நீர் |
| பூர்த்தி செய்தான் | – | நிறைவு செய்தான் |
| பூரிப்பு | – | பெருமகிழ்ச்சி |
| மருங்கு | – | ஓரம் |
| மருதம் | – | மருத நிலம், மருத மரம் |
| மனு | – | புகார் தெரிவித்து எழுதும் கடிதம் |
| மாட்சி | – | அழகு, பெருமை |
| மாளும் | – | அழியும் |
| மானிடர் | – | மனிதர் |
| மானுடம் | – | மனித இனம் |
| முகில் | – | மேகம் |
| முரலும் | – | வண்டு எழுப்பும் ஒலி |
| மெய் | – | உண்மை |
| மேனி | – | உடல் |
| வண்ணம் | – | நிறம் |
| வாரணம் | – | யானை, சங்கு |
| விபரீதம் | – | விசித்திரம் |
| வினவினாய் | – | கேட்டாய் |
| வீதி | – | தெரு |
| வெம்மை | – | வெப்பம் |
| வெருட்டி | – | அச்சமுறுத்தி |
| வெளி | – | சுற்றுப்புறம் |
| ஹோட்டல் | – | உணவகம் |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ   பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

அன்பார்ந்த குழந்தைகளே,

உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,
கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்-34, தொலைபேசி : 0471-2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring : www.nireekshana.org.in***